# விவிலிய வினாடி வினா

## சரியான விடைகளை எழுதியவர்கள்

**அருட்சகோதரிகள்**

லூர்து மேரி, மேரி செசாரியா- சென்னை, எதெல்பெர்கா, வில்சன் மேரி, டோன்போஸ்கோ மேரி, ஜோஸ்பிட்டா மேரி- திருச்சி, ஜெரின் மேரி, மிரியம்- திண்டுக்கல், ஜீலி எலிசபெத், மேரி மெளரிஸ், ஜீலியானா - தஞ்சாவூர், லூயிஸ் ஜெசிந்தா, மார்சலோசா மேரி, லோரா மேரி, லாசரிற்றா மேரி - தூத்துக்குடி, புஷ்பா மேரி - காரைக்குடி, ரூபெல்லா மேரி, வித்யா மேரி, பிரேமா - திருநெல்வேலி, லில்லி இஸபெல்லாமேரி, ஜான்சி மேரி, ஃ பெர்சி மேரி- மதுரை, றோஸ்லினா - சிவகங்கை, சலேத் மேரி- திருப்பூர், சகாயம் -கடலூர், ரொமானா, அருள் சீலி- நாகர்கோவில், அருள்மேரி, பவுலின்,டோனெட்டல்லா அனஸ்த்தாசியாள்,லூக்காஸ் மெரி,டோம்னா மேரி,அனன்சியா மேரி, ஜார்லத் புஸ்பா,பிலோமினாள்,ஆக்னஸ்-கும்பகோணம்

**பொதுநிலையினர்**

ரூபியா, அந்தோனி ஜெனிலியா - மங்கலக்குன்று, பிரான்சிஸ் பேசில், மேரி மார்கரேட், ஆனி பீட்டர் ராஜ், கிளாரா லூர்து மேரி, அனிருத் ஜோஸ்வா, இமாக்குலேட் சோபியா, சந்தனம், லீமா தெரஸ், நான்சி பியூலா, செலின் மேரி - திருச்சி; லீலாவதி, அமல செல்வி, இருதய விஜிலா,மார்கிரேட் பெல்சியா,ஜோஸ்பின் மேரி திண்டுக்கல் ததேயுஸ் கரோலின் - திருப்பூர், புஷ்பக்கண்ணு - கோயம்பத்தூர். சிப்ரியன் - தெளி, மரிய பிரகாசம் - தர்மபுரி, ரீனா அந்தோணிராஜ், வியாகுல மேரி, ராணி- சென்னை, இம்மாக்குலேட், ஜெயராஜ் - செங்கல்பட்டு

## குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்



அருட்சகோதரி ஆக்னஸ் - கும்பகோணம்
அருட்சகோதரி ரொமானா-- நாகர்கோவில்
திருமதி இம்மாக்குலேட் - செங்கல்பட்டு
திருமதி வியாகுல மேரி - சென்னை

**Owned and Published by THE ORDER OF SERVANTS OF MARY from Jyothi Matha Alayam. 5/301 Matha Koil Street, Rajiv Gandhi Road, Okkiampet, Chennai – 600 097 and Printed by M. RAJA REGAN at Devan Press, Old No.138/1, New No.158/1, Venkatachala Mudali Street, Royapettah, Chennai – 600 014.
Editor: Fr. R.M. UGIN WINNER OSM.**








# புனிதத்தின் மகிமை மரியாள்

## பதிப்பாசிரியர் பக்கம்


ந.ம. யூஜின் வின்னர் ம.ஊ.ச

இறையேசுவில் அன்பிற்குரிய சகோதர சகோதரிகளே அன்னை மரியின் பக்தர்களே நவம்பர் மாதம் 1 ஆம் தேதி அனைத்துப் புனிதர்களின் திருவிழாவினைக் கொண்டாடுகின்றோம். நம்முடைய கத்தோலிக்கத் திருஅவையானது இந்த மண்ணுலகில் பிறந்த சாதாரண மக்களுக்கும் மதிப்பையும் மரியாதையையும் அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையின் அடிப்படையில் கொடுக்கின்றது. அதனால்தான் நம்முடைய திருஅவையில் ஆயிரக்கணக்கான புனிதர்களும் புனிதைகளும் இருக்கின்றார்கள். அதிலும் சிறப்பாக நம்முடைய கத்தோலிக்க திருவழிபாட்டு நாட்காட்டியில் ஏறக்குறைய எல்லா நாட்களிலும் ஏதாவது ஒரு புனிதரின் திருவிழாவானது கொண்டாடப்படுகின்றது.

இந்த ஆயிரக்கணக்கான புனிதர்களில் ஒருசிலபேர் கத்தோலிக்கத் திருஅவையால் அங்கீகரிக்கப்பட்ட புனிதர்கள், ஒருசிலர் அங்கீகாரம் பெறுவதற்கான நிலையில் இருக்கக்கூடியவர்கள். இன்னும் சிலர் அங்கீகாரத்திற்கான முயற்சிகள்கூட எடுக்காமல் நல்ல மண்ணுலக வாழ்க்கை வாழ்ந்தவர்கள் இன்னும் சிலர் கத்தோலிக்க மதத்தைச் சாராமல், ஆனால் தூய வாழ்க்கை வாழ்ந்தவர்கள். கத்தோலிக்கத் திருஅவையால் அங்கீகாரம் பெற்ற புனிதர், புனிதைகளுக்கு தனித்தனியாக ஆலயங்கள் ஒப்புக்கொடுப்பட்டிருக்கின்றது.



## உள்ளே



கதையினில் கலந்த மரியா - 05
செபிக்கும் மரியா II - 06
அன்னையின் திருத்தலங்களை நோக்கி - 09
விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி - 14
அன்னை இருக்க பயமேன்? - 16
ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன் - 17
மரியின் ஊழியர்சபையின் புனிதம் - 24
மாதா மன்றாட்டு மாலை - 25
பொதுநிலையினரின் பார்வையில் மரியா - 28
நாமும் ஒரு நாள் - 30
ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி - 32

இத்தனை புனிதர் புனிதைகளுக்கு மத்தியில் ஒரு புனிதை மிகப்பெரிய மகிமையைப் பெற்றிருக்கின்றார். அவர்தான் நம் அன்னையும் கடவுளின் தாயுமான அன்னை மரியாள். இவ்வளவுப் பெரிய சிறப்பினை மகிமையினை அன்னை மரியாள் பெறுவதற்கு காரணம் அவள் தன்னை ஒப்புக் கொடுத்தது, அர்ப்பணம் ஆக்கியது. எல்லா நிலையிலும் அன்னை தன்னை கடவுளுக்கு காணிக்கையாக்கினாள். அன்னை மரியாள் சிறுகுழந்தையாக இருந்தபோது அவளின் பெற்றோர் அவரை கோவிலில் காணிக்கையாக ஒப்புக் கொடுத்தனர்.

அன்னை மரியாள் வளர்ந்து பெரியவள் ஆகியவுடன் கடவுளின் திட்டத்திற்கு தன்னை ஒப்புக் கொடுத்தார். எவ்வாறு ஒப்புக்கொடுத்தார் என்றால், கபிரியேல் தூதர் நீர் தூய ஆவியினால் கருவுற்று ஒரு மகனைப் பெற்றெடுப்பீர் அவருக்கு இயேசு என்று பெயரிடுவீர், அவர் உன்னதராயிருப்பார் என்றவுடன் நான் கன்னியாயிற்றே என்ற ஐயப்பாடு வந்தபிறகும் "இதோ ஆண்டவரின் அடிமை உமது வார்த்தைப்படி எனக்கு நிகழட்டும்" என்று தன்னை முழுமையாக கடவுளுக்கு ஒப்புக்கொடுத்ததுதான் அவரை புனிதர்களுள் பேறுபெற்றவராக மகிமைக்குரிய புனிதையாக உயர்த்தியது.

அன்னை மரியாள் ஆண்டவர் இயேசுவின் வாழ்க்கையின் ஒவ்வொரு நிகழ்விலும் தன்னை முழுமையாக கடவுளுக்கு ஒப்புக் கொடுத்துக் கொண்டே வந்தார். பிறந்த குழந்தைஇயேசுவை கோவிலில் காணிக்கையாக ஒப்புக் கொடுப்பதற்காக சிமியோன் தீர்க்கதரிசியிடம் கொண்டுசென்றபோது இந்தக் குழந்தையானது பலரின் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் காரணமாக இருக்கும், உம்முடைய உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவும் என்ற வியாகுலம் நிறைந்த வார்த்தையைக் கேட்டவுடன் கடவுளின் திட்டத்திற்கு தன்னை முழுமையாக ஒப்புக் கொடுக்கின்றார். ஏரோது மன்னன் குழந்தை இயேசுவைக் கொலை செய்வதற்காக தேடுகிறான் அதனால் எகிப்து நாட்டிற்கு தப்பிச் செல்லுங்கள் என்று புனித யோசேப்புக்கு வானதூதர் கனவில் எச்சரிக்கைக் கொடுத்தவுடன் இதுவும் கடவுளின் திட்டம் என்று தன்னை முழுமையாக கடவுளுக்கு ஒப்புக் கொடுக்கின்றார் நம் அன்னை மரியாள்.

ஒவ்வொரு ஆண்டும் யூதர்கள் தங்களுடைய முக்கியமான விழாக்களைக் கொண்டாட எருசலேம் தேவாலயம் செல்வது வழக்கம். அவ்வாறு அன்னை மரியாள், புனித யோசேப்பு மற்றும் சிறுவன் இயேசு எருசலேம் செல்கின்றார்கள். திரும்பிவரும்போது இயேசுவைக் காணவில்லை. இந்த வியாகுலம் நிறைந்த நிகழ்வினையும் கடவுளின் திட்டம் என்று அன்னை மரியாள் கடவுளுக்கு ஒப்புக் கொடுக்கின்றார். அதோடு இயேசுவின் பாடுகள், இறப்பு மற்றும் உயிர்ப்பினையும் கடவுளின் திட்டம் என்று ஒப்புக்கொடுத்து வாழ்ந்த அன்னை மரியாள் நிச்சயமாக புனிதத்தின் மகிமைதான். இவ்வளவு சிறப்பு வாய்ந்த அன்னையின் பக்தர்களாகிய நாம் அவரின் பாதச்சுவடுகளைப் பின்பற்றி கடவுளிடம் நம்மையும் ஒப்புக் கொடுப்போம்.

**புனிதம் என்பது கேட்டுப் பெறுவதில் அல்ல**

**புனிதம் என்பது வாழ்ந்து காட்டுவதில**





# நாஞ்சிக்கோட்டை ஜீவமாதா இல்லத்தின் சாட்சிகள்

**எலிசபெத் ராணி – கீழவஸ்த்தசாவடி**

எனது தம்பி மகனுக்கு நீண்ட நாட்களாக சரியான வரன் அமையாத காரணத்தால் குடும்பத்தில் அனைவரும் மிகுந்த மன வருத்தத்தில் இருந்தோம். அந்த நேரத்தில் ஜனவரி 2023-ல் ஜீவமாதா ஆலயத்திற்கு வரும் வாய்ப்பு கிடைத்தது. ஜீவமாதாவிடம் இந்த கருத்திற்காக மிகவும் நம்பிக்கையோடு ஜெபித்து வந்தேன். மாதாவின் அருளால் நல்ல வரன் அமைந்தது. 20.08.2023-ல் திருமணம் நடந்தது. ஜீவமாதாவிற்கு நன்றி. மேலும் எனது அக்கா மகள் அரசு நடுநிலைப்பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வருகின்றார்கள். பணிபுரியும் இடத்தில் சூழ்நிலை சரியில்லாத காரணத்தால் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக கடுமையான மன உளைச்சலுக்கு ஆளாகி உடல்நலம் பாதிக்கப்பட்டு இருந்தார்கள். அப்போது நான் அவர்களுக்காக ஜீவமாதாவிடம் மிகவும் உருக்கமாக வேண்டிக்கொண்டதன் பேரில் ஜீவமாதா அவர்களுக்கு ஜீன் 2023-ல் இடம் மாறுதல் கொடுத்தார்கள். இதனால் தற்போது மன அமைதியுடன் பணிபுரிந்து வருகின்றார்கள். ஜீவமாதா மூலமாக நாங்கள் பெற்றுக் கொண்ட அனைத்து நன்மைகளுக்கும் நன்றி. மரியே வாழ்க! இயேசுவுக்கே புகழ்!

**சகாயநாதன், குளோரி – அண்ணாநகர்**

நான் கலைஞர் நகர் 3வது தெருவில் வசிக்கிறேன். எனக்கு 2 பெண் குழந்தைகள். அதில் மூத்த பெண் அஞ்சலி எலிசபெத். அவருக்கு முதல் குழந்தை அபாட் ஆகியது. நான் ஜீவமாதாவிடம் என் மகளுக்காக வேண்டினேன். அன்னையே நீர் கருத்தரித்து ஒரு மகனை பெற்றெடுத்ததுபோல் என்மகளும் கருதரித்து ஒரு குழந்தையை பெற்றெடுக்க வேண்டும் என்று. அதேபோல் 26.08.2023 அன்று என்மகளுக்கு குழந்தை பிறந்தது. மரியே வாழ்க! இயேசுவுக்கே புகழ்!



# ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி

செல்வன். ததீஸ்
சோழிங்கநல்லூர், சென்னை

அக்டோபர் மாதம் 7 ஆம் தேதி மாதத்தின் முதல் சனிக்கிழமை. ஜீவ மாதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட நாள். பக்தர்கள் கூட்டம் சற்று அதிகமாகவே காணப்பட்டது. வந்திருந்த அனைத்து மக்களும் பக்தியோடு செபமாலை, குணமளிக்கும் நற்கருணை ஆராதனை, சாட்சியப் பகிர்வு, திருப்பலி என்று அனைத்து திருவழிபாட்டு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு இறையாசியை அன்னையின் பரிந்துரை வழியாக வேண்டினர். மேலும் அவர்கள் கூறிய சாட்சியங்கள் பலரது வாழ்வில் நம்பிக்கை ஒளியை பிரகாசிக்க வைத்திருக்கின்றது. அந்த சாட்சியப் பகிர்வுகள் இதோ உங்களுக்காக:

**சார்லஸ் – சோழிங்கநல்லூர்**

எனக்கு சிறுநீர்க்குழாயில் ஏற்பட்ட பிரச்சனையால் பெரிய அறுவை சிகிச்சை செய்ய மருத்துவர்கள் கூறியபோதும் சிறிய அளவிலான அறுவை சிகிச்சையோடுதான் நலம் பெற்றதிற்கும் தன் குடும்பத்தினரின் ஒத்துழைப்பிற்கும் ஜீவமாதா வழியாக இறைவனுக்கு நன்றி. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**இருதய மேரி, எட்வின் - புனித தோமையார் பங்கு**

எனது மூத்த சகோதரி அவர்கள் தனக்கு ஜீவமாதா பரிந்துரையின் பேரிலேயே குழந்தை பாக்கியம் கிடைத்ததாகவும், இவருக்கு இரண்டு முறை கருக் கலைந்த நிலையில் அன்னையின் பரிந்துரை வேண்டி செபித்ததன் பலனாக தற்போது நல்ல முறையில் குழந்தை பாக்கியம் கிடைத்ததற்காக அன்னைக்கு நன்றி. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**லூர்து மேரி**

நான் என்மகளுக்கு ஆண் குழந்தை வேண்டும் என்று ஜீவமாதாவிடம் வேண்டினேன். மாதாவின் அருளால் என்மகளுக்கு ஆண் குழந்தை பிறந்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!





# கதையினில் கலந்த மரியா

அருள்பணி. ஆன்றணி ஷாஜி ம.ஊ.ச



**அன்பின் தாய்**

ஒரு மலையில் பாரம்பரியமான ஒரு ஆசிரமம் இருந்தது. ஒரு வயதான பெண்மணிதான் குருவாக இருந்தார். அவர் எல்லாவிதங்களிலும் இளம் சீடர்களை தகுதியானவர்களாக உருவாக்கினார். எந்த தீய பண்புகளும் அவர்களிடம் இல்லை. ஒரு சீடர் மட்டும் அடிக்கடி எதையாவது திருடி மற்றவர்களிடம் மாட்டிக் கொள்வார். ஒவ்வொருமுறையும் அந்த சீடரை குருவிடம் கொண்டுவருவார்கள். திருடிய சீடர் தலைகுனிந்து நிற்பார். குரு அவரை மன்னித்து இனிமேல் திருடாதே என்று சொல்லி அனுப்பி விடுவார். குரு அவரை மன்னித்து விடுவதை பிற சீடர்கள் விரும்பவில்லை. மற்றொரு முறையும் அதே சீடர் ஒரு மிகப் பெரிய பொருளை திருடிவிட்டார். இந்த முறையும் குரு அந்த சீடனை மன்னித்து விட்டார். மற்ற சீடர்கள் கொதித்தெழுந்தார்கள். இந்தமுறை அந்த சீடனை நீங்கள் ஆசிரமத்தை விட்டு வெளியே அனுப்பாவிட்டால் நாங்கள் அனைவரும் வெளியேறுவொம் என்றார்கள். சில நிமிட அமைதிக்குப் பிறகு குரு சொன்னார் நீங்கள் எல்லோரும் வெளியேறினாலும் திருடிய சீடர் இங்குதான் இருப்பான் என்றார். ஏன் இந்த திருடன்மீது இவ்வளவு அன்பு என்று ஒருவர் கேட்டார். அந்த பெண்குரு நீங்கள் எல்லோரும் முழுமையாக வளர்ந்து விட்டீர்கள் எனவே நீங்கள் இந்த ஆசிரமத்தை விட்டுச் சென்றால் வளமாக வாழ்வீர்கள் அந்த சீடர் இன்னும் நிறைய வளர வேண்டியிருக்கிறது, அவன் இங்குதான் இருப்பான் என்றார். குருவின் அன்பின் ஆழத்தை கண்ட சீடர்கள் மெய்சிலிர்த்தனர்.

அன்பு என்ற அச்சில்தான் இவ்வுலக உயிர்களின் இயக்கம் நடைபெறுகிறது. அன்பே கடவுள் என்ற அழகிய சொற்றொடர் உண்டு. 1யோவான் 4:5, கடவுள் அன்பாய் இருக்கிறார். அன்பில் நிலைத்திருக்கிறவர் கடவுளோடு இணைந்திருக்கிறார் என்று வாசிக்கின்றோம்.

தன்னலமில்லாத தாயன்பிலே கடவுளன்பு வெளிப்படுவதைக் காண்கிறோம். இறைவனின் தாய் மரியாவின் அன்பிலே கடவுளன்பு முழுமையாக வெளிப்படுகிறது. அன்னை மரியாள் தந்தை மீது கொண்ட அன்பினால் மீட்புத் திட்டத்திற்கு ஆகட்டும் என்று சொல்லி தன்னையே அர்ப்பணித்தார். அன்பினால் தூண்டப்பட்டு ஓடோடிச் சென்று எலிசபெத்துக்கு உதவிக்கரம் நீட்டுகிறார். அன்பு நிறைந்த நம் அன்னை அளவுகடந்த அன்பினால் நம்மை அரவணைக்கிறார். அன்னையின் வழி அன்பு வழியே, தாயின் வழியே அவர்தம் சேய்களின் வழியாகட்டும்.

# செபிக்கும் மரியா II

அருள்சகோதரி. டெக்லா ம.ஊ.ச.,
செர்வைட் தலைமையகம், சென்னை.

செபிக்கும் மரியா திருச்சட்டத்தை நிறைவேற்றுவதில் கண்ணும் கருத்துமாய் இருந்தார். இயேசு பிறந்த எட்டாம் நாள் விருத்தசேதனம், திருநாமம் சூட்டுதல், நாற்பதாம் நாள் கோவிலில் அர்ப்பணித்தல், ஆண்டுதோறும் பாஸ்கா விழாவைக் கொண்டாட எருசலேமுக்கு திருப்பயணம் மேற்கொள்ளுதல் என்று யூதச் சட்டங்களையும் மரபுகளையும் பிரமாணிக்கமாக மரியா பின்பற்றுவது, இறைவன் மேல் அவர் கொண்டிருந்த பேரன்பை வெளிப்படுத்துகிறது. பாலன் இயேசுவை சந்திக்க இடையர்கள் வந்திருந்த போதும், மூன்று ஞானிகள் அவரை ஆராதிக்க வருகை புரிந்த போதும் ஒரே மனநிலையில், செபிக்கும் மரியா காணப்பட்டார். உம் இதயத்தை ஓர் வாள் ஊடுருவும் என்று சிமியோன் உரைத்த போதும், குழந்தை இயேசுவை தூக்கிக் கொண்டு எகிப்துக்கு இரவிலே ஓர் அகதி போன்று ஓடிய போதும், மூன்று நாட்கள் சிறுவன் இயேசுவைக் காணாமல் தேடிய போதும் அவரிடத்தில் காணப்பட்டது ஏற்றுக்கொள்ளுதல், பணிவு, தாழ்ச்சி, இறைபராமரிப்பில் நம்பிக்கை என்ற உயரிய விழுமியங்கள். செப மனநிலையில் இருப்பவர் மட்டுமே எப்போதும் இறைக் குரலைக் கேட்கவும், அதற்கு ஆகட்டும் என்று பணியவும் முடியும். இதற்கு ஒரு மேல் வரிச்சட்டமாக, மரியாவை, நற்செய்தி நம்முன் வைக்கிறது. உண்மையான இறைவேண்டலில் ஈடுபடுபவர்கள் இறைவனிடம் இறைவனுக்காக அனைத்தையும் தாங்கிக் கொள்வார்கள். அனைத்திலும் இறைத்திருவுளத்தை உய்த்துணர்வார்கள். இறை அருளிலும், இறை ஆற்றலிலும் நிறைந்திருப்பார்கள். இவர்கள் இறைவனிடம் பிறருக்காகவும் பரிந்துரை செய்வார்கள். அதுதான் கானாவூரில் நிகழ்ந்தது. ஏழைகளின் துயரைப் போக்க இரசம் பற்றவில்லையே என்று மகனிடம் அங்கலாய்க்கின்றார். எனது நேரம் இன்னும் வரவில்லையே என்ற பதிலில் அவருக்குள்ள நல்ல மனதைப் புரிந்து கொள்கின்றார். இதை விட வேறு நேரம் ஒன்று இருக்க முடியாது என்பதை ஆவியாரின் உள்ளொளியில் புரிந்து மரியா, தன் மகன் அரும் அடையாளம் செய்யும் நேரத்தைக் கணிக்கின்றார்.

இயேசுவின் பாடுகளிலும் மரணத்திலும் முழுமையாக பங்கேற்க மரியாவைத் தூண்டியது இறை ஆற்றல். இறைவேண்டல் வழி இறை ஆற்றலை நிரம்பப் பெற்றிருந்தார். ஆண் சீடர்களெல்லாம் தங்களின் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஓடி ஒளிந்த போது மரியா மிகத் துணிவோடு தம் மகனின் கல்வாரிப் பயணத்தில் பங்கேற்றார். தன் உடனிருப்பால் இயேசுவுக்கு ஊக்கம் அளித்தார். அவருடைய வேதனைகள், அவமானங்கள் அனைத்தும் தனது இதயத்தில் வாள்களால் உடுருவ அனுமதித்தார். தனது இதயத்தில் மற்றொரு கல்வாரிப் பீடத்தை உருவாக்கி அதில் தன்னை தகனப் பலியாக்கினார். எனவேதான் திருஅவை கன்னி மரியாவே நீர் பேறுபெற்றவர். ஏனெனில் சாகாமலே சிலுவையடியில் நின்று வேதசாட்சியின் முடியைப் பெற்றீர் என்று அகமகிழ்ந்து அக்களிக்கின்றது. பெரிய சனி முழுவதும் தன் மகனின் பாடுகளையே நினைத்து தியானித்து, தனிமையில் கைவிடப்பட்ட மாமரியாக இருந்த போதிலும் தன் மகனோடு மிக நெருக்கமாக ஒன்றித்து இருந்தார். பெந்தகோஸ்துப் பெருவிழாவில் தூய ஆவியாரை அபரிவிதமாகப் பெற ஆழ்ந்த இறைவேண்டலில் ஈடுபட்டிருந்தார். தான் மட்டுமல்ல. சிதறிக்





என்னிடம் நம்பிக்கை கொள்பவர்
இறப்பினும் வாழ்வர் - (யோவா 11:25)
நவம்பர் இரண்டாம் நாள்
கல்லறைகளைத் தூய்மைப்படுத்தி
பூக்களால் அலங்கரிக்கிறோம்
இறந்தவர்களுக்காக செபிக்கிறோம்
இயேசுவின் உயிர்ப்பை உறுதிப்படுத்தியது...
அவருடைய திறந்த கல்லறையே
நமது செபத்தாலும் தானதர்மத்தாலும் தவத்தாலும்
இறந்தோரின் கல்லறைகளும் திறக்கப்படும்
அவர்களும் உயிர்த்து நிலைஇன்பம் துய்ப்பர்
இறந்த நம் உறவினர்கள் என்றும் நம்முடன்
வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றனர்
அவர்களின் - இலட்சியங்கள்
விட்டுச் சென்ற பண்புகள்
காட்டிய வாழ்க்கைப் பாதைகள்
நம்முடன் இருந்து நம்மை வழிநடத்துகின்றன
அவர்களின் பண்புகளைப்பின் தொடர்வதே
நாம் அவர்களுக்குச் செலுத்தும் அஞ்சலியாகும்
இறந்த அன்புடை நெஞ்சங்களின் உறவுகள்
என்றுமே நம்மைவிட்டு நீங்கவதில்லை
அன்பு என்பது காலத்தால் அழியாத ஆற்றல்
இந்த அன்புக்காக வாழ்ந்த ஒவ்வொருவரும்
என்றுமே வாழ்ந்து கொண்டுதான் இருப்பர்
நாம்......
அன்புடை ஆன்மாக்கள்
ஆண்டவரை அடிசேர செபிப்போம்
அன்பு கொண்டு வாழ்வோம்
விண்ணுலகின் நிலையான இன்பம் பெற
நாமும் ஒருநாள்...... என்பதை நினைவோம்.

# நாமும் ஒரு நாள்..

திருமதி. ஃபிலோம்மா, திருச்சி.

எத்தனைகோடி இன்பம் வைத்தாய் - எங்கள்
இறைவா! இறைவா! இறைவா! – (பாரதியார்)

இறைவா! வரிநீர் வியனுலகம் அமைத்தாய்
அதனுள் அத்தனை கோடி இன்பமும் வைத்தாய்
உன் படைப்பினைச் சுவைக்க
மனுக்குலம் படைத்தாய், உவகையில் திளைத்தாய்
இன்பம் காண்பதில் ஓர் எல்லையும் வகுத்தாய்
அதுதான் வாழ்வின் முடிவெனும் நிலையோ!

இவ்வுலக இன்பங்களைக் கொடுத்த நீ
விண்ணுலக இன்பமும் தரிவிழைந்தாயோ!
எனவேதான் மனிதரின் மரணமோ!
பிறந்தவரெல்லாம் இறக்கவும் வேண்டும்
என்பதோ உன் நியதி!

நமது முன்னோர் வாழ்வின் முடிவையும்
அவர்கள் கல்லறையில் சிலுவைகளாய் நிற்பதையும்
நாமும் ஒருநாள் சிலுவைகளாவோம் என்பதையும் நினைந்து
நிலையான மறுவாழ்வின் தகுதிக்கு
நம்மைத் தூய்மைப்படுத்த தூண்டுவதே
கல்லறைத் திருநாள்

பாவநோயால் துன்புற்றுத் தூய்மையுறத் துடிக்கும்
ஒவ்வொரு ஆன்மாவிற்கும் நாம் காட்டும் கரிசனமே
நவம்பர் இரண்டு

தங்கள் பாவவாழ்விற்காக வருந்தி
மனத்துயர் அடைந்தவர்களை
இறைவன் கைவிடுவதில்லை





கிடந்த சீடர்களை எல்லாம் ஒன்று திரட்டினார். அனைவரும் ஆவியாரைப் பெற்று நற்செய்தியை முழக்கமிடும் நாவன்மை நிறைந்தவர்களாய் உலகமெங்கும் சென்றிட, திருஅவை பிறந்திட, அனைவரையும் ஒன்றிணைத்தது செபிக்கும் அன்னை மரியா. இன்னும் சிலுவையடியில் நம்மைப் பெற்றெடுத்த மரியா பயணம் செய்யும் திருஅவைக்காக செபிக்கின்றார். அதோடு பயணிக்கின்றார். அது அடைய வேண்டிய நிறைவாழ்வின் அடையாளமாகத் திகழ்கின்றார்.

**இறைவேண்டலின் முப்பரிமாணங்கள்**

செபிக்கும் மரியாவின் வாழ்வை உற்று நோக்குகையில் இறைவேண்டலின் முப்பரிமாணங்கள் அவரிடம் வெளிப்படுவதை காணமுடிகிறது. 1) இறைக்குரலைக் கேட்டல் 2) அதை இதயத்தில் பதித்தல் 3) அதற்கு வாழ்வில் செயல் வடிவம் கொடுத்தல். வெறும் புறக்காதுகளால் மரியா இறைக்குரலுக்கு செவிமடுக்கவில்லை. இதயக் காதுகளால் இறைவனின் குரலைக் கேட்டார். மங்கள வார்த்தை நிகழ்வில் கடவுளின் செய்தியை வானதூதரின் வழியாகக் கேட்டார். அக்கேட்டலில் கேள்வி எழுந்தது விளக்கத்தைப் பெற்றார் மீண்டும் பதிலளித்தார். இந்நிகழ்வில் இறைத்தந்தையை மரியா சந்தித்தார். தூய ஆவியார் அவர் மீது நிழலாடினார். இறை மகனை தன் உதரத்தில் கருத்தரித்தார். மூவொரு இறைவனின் இறைப்பிரசன்னத்தில் மூழ்கித் திளைத்தார். நமது செப வேளையில் இறைவன் நம்மோடு பேச அனுமதிக்கின்றோமா? அவரது குரலைக் கேட்க முடிகிறதா? நமது உள்ளம் ஆழ்கடலின் அமைதி போன்று இருக்கின்றதா? அவரது குரலை செயல்பாடுகளோடு கூடிய வாழ்வின் பின்னணியில் தான் உணர முடியும்.

நற்செய்தியாளர் லூக்கா இரண்டு இடங்களில் மரியா தன் வாழ்வில் நிகழ்ந்த முக்கிய நிகழ்வுகளை இதயத்தில் வைத்து சிந்தித்தார் என்று கூறுகிறார். ஒவ்வொரு நிகழ்வு வழியாகவும் இறைவன் என்ன சொல்ல விரும்புகிறார் என்பதை இதயத்தால் கேட்டார். நிகழ்வுகளுக்கு செவிமடுத்தார். தம் முன்னோருக்கு இறைவன் ஆற்றிய அரும் பெரும் செயல்களோடு நிகழ்கால அற்புதங்களை உரசிப் பார்த்தார். குழந்தை இயேசுவை இடையர்கள் சந்தித்த நிகழ்வை, அவர்கள் கூறியவற்றையெல்லாம் 'தம் உள்ளத்தில் இருத்தி சிந்தித்துக் கொண்டிருந்தார்". மூன்று நாட்களுக்குப் பின் சிறுவன் இயேசுவை எருசலேம் கோவிலில் கண்டபோது மகனின் உரையாடலைக் கேட்டு புரியாமல் இருந்தார். ஆயினும் இந்நிகழ்ச்சிகளையெல்லாம் தமது உள்ளத்தில் வைத்து பதித்திருந்தார். மீண்டும் மீண்டும் அவற்றை ஆழ்ந்து தியானிக்க மீட்பின் திட்டம் படிப்படியாக அவருக்கு வெளிப்படுத்தப்பட்டது. நம் வாழ்வில் ஏற்படும் ஒவ்வொரு நிகழ்வையும் நாம் எவ்வாறு சந்திக்கிறோம். இறைவன் திருவுளம் இன்றி எதுவும் நடைபெறாது. செப மனநிலையில் இருப்பவர்கள் எதையும் இறைநோக்கில் பார்க்க, தியானிக்க தூய ஆவியாரால் வழிநடத்தப்படுகிறார்கள். இத்தகைய அருள் நிலைக்கு நம்மைக் கையளிக்க முன் வருகிறோமா? சிந்திப்போம். நமது வாழ்வை சீர்தூக்கிப் பார்ப்போம்.

மரியா இறைக்குரலுக்கு செயல் வடிவம் கொடுத்தார். இறைவார்த்தையின் ஆழத்திற்குச் சென்றார். அதோடு தன்னை ஐக்கியப்படுத்தினார். இறைவார்த்தைக்குப் பணிந்தார். அதை முழுமையாக வாழ்ந்தார். புனித அகுஸ்தினார் கூறுகிறார்: இறைவார்த்தையாம் இறைவனை தன் உதரத்தில் கருத்தரிக்கும் முன்பே, மரியா இறைவார்த்தையை தன் உள்ளத்தில் கருத்தரித்தார். அந்த வார்த்தையாம் இறைவனுக்கு உடலை அளித்தார். நல்ல நிலத்தில் விழுந்த விதை போன்று அவரது இதயம் அமைந்திருந்தது. சீரிய நல் உள்ளத்தோடு இறைவார்த்தையைக் கேட்டு அதைக் காத்து மன உறுதியுடன் பலன் தருபவராக மரியா இருந்தார் (லூக் 8:5). இறைவார்த்தைக்கு கீழ்ப்படிவதில் மகிழ்ச்சி அடைந்தார். மகிழ்வு,

துயரம் ஆகிய ஒவ்வொரு நிகழ்வையும் ஆம் என்று உள்ளத்தில் உரைத்தபடியே ஏற்றுக்கொண்டார். நமது வாழ்வில் நடக்கும் நிகழ்வுகளின் வழியாக இறைவன் நம்மோடு உரையாடுவதைக் கேட்போம். செபம் என்பது வெறும் வாய் வார்த்தைகளை உதிர்ப்பது மட்டுமல்ல, செப வேளைகளில் உள்ளத்தின் ஆழத்திற்குச் சென்று ஒப்பற்ற செல்வமாம் இறைவனைக் கண்டு கொள்வது, தரிசிப்பது, ஆராதிப்பது, அவர் தரும் அழைப்பினை வாழ்வது போன்ற பரிமாணங்களில் வளர்வது உண்மையான இறைவேண்டலின் வெளிப்பாடாக அமைகிறது. இத்தகைய வாழ்வினால் நாமும் இறைவார்த்தைக்கு உயிர் கொடுப்போம். நமது வாழ்விலும் அது மனுவுரு எடுக்கட்டும்.

'இறைவார்த்தையைக் கேட்கிறவர்களாக மட்டும் இருந்து உங்களை ஏமாற்றிக் கொள்ள வேண்டாம். அதன்படி நடக்கிறவர்களாகவும் இருங்கள்" (யாக் 1:22) என்ற திருத்தூதர் யாக்கோபுவின் கூற்றை நாம் நினைவு கூற வேண்டும். எனவே செபத்தின் முக்கியமான அம்சம் நாம் செபத்தை வாழ்வாக்குவது. அன்னை மரியா இதற்கு சிறந்த முன்மாதிரியாக விளங்குகின்றார். இவ்வாறு இறைவேண்டலின் மூன்று சிறப்புக்களையும் உள்ளடக்கியதாக மரியாவின் அன்றாட வாழ்வின் ஒவ்வொரு அனுபவத்திலும் அவரின் செபவாழ்வு மிளிர்ந்தது.

**நிறைவுரை**

இயேசு தம் சீடர்களுக்கு செபிக்க கற்றுக் கொடுத்தது போல மரியாவும் தனது காட்சிகளின் போது செபமாலை செபிக்கக் கேட்டுக் கொண்டார். செபமாலை மணிகளை நகர்த்தியவாறும், உதடுகளை செபத்தில் அசைத்தவாறும் காட்சிகளில் தோன்றினார். எனவே தினமும் செபமாலை செபித்து குடும்ப ஒற்றுமையைக் கட்டிக் காப்போம். நமது இல்லங்கள் குட்டித் திருஅவையாக மாறட்டும். கூட்டியக்கத் திருஅவையின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறட்டும்.

செபிக்கும் மரியாவைப் போன்று இறைவார்த்தையை அடிப்படையாகக் கொண்டு செபிப்போம். அப்போது நமது கிறிஸ்தவ வாழ்வு அல்லது சீடத்துவ வாழ்வு இறைவார்த்தையில் வேரூன்றியதாய் சிறந்து விளங்கும். இறைவார்த்தையின்படி நடப்பவர்கள் இயேசு கிறிஸ்து என்னும் கற்பாறையின் மீது தங்கள் வாழ்வைக் கட்டியெழுப்புபவர்களாய் இருக்கின்றனர்.

நாசரேத்து ஊரில் வாழ்ந்த இயேசுவின் குடும்பம் நமது மத்தியில் உருவாக இறைவார்த்தையின் படி வாழ்வதே நமது கடமை. இறைவார்த்தையின் படி நடப்பவரே இறைத்திட்டத்தை நிறைவேற்ற முடியும். இதையே இயேசு 'இறைவார்த்தையைக் கேட்டு அதன்படி செயல்படுகிறவர்களே என் தாயும் சகோதரர்களும் ஆவார்கள்" (லூக் 8:21) என்று கூறுகிறார். நாமும் இத்தகைய வாழ்வு வாழ்ந்து இயேசுவின் உறவினராவோம்.

இத்தகைய உயர்வான கிறிஸ்தவ வாழ்வு வாழ்வது நமக்குக் கடினமாகத் தோன்றலாம். தனது போதனையைக் கேட்ட பெண் ஒருவர் பெருங்குரலெடுத்து கூட்டத்தில் தன் தாயைப் புகழ்ந்த போது இயேசு கூறிய வார்த்தைகளை நினைவு கூருவோம். 'இறைவார்த்தையைக் கேட்டு அதைக் கடைபிடிப்போர் தம் தாயினும் அதிகம் பேறுபெற்றோர்" (லூக் 11:28). எனவே அன்னை மரியாவைப் போன்று நாமும் பேறுபெற்றோர் கூட்டத்தில் இணைய, இறைவார்த்தையைக் கேட்டு மிகுந்த கனிகள் தர, நூறு மடங்கு விளைச்சலைக் கொடுக்க நமது இதயங்களை இறையருளால் பண்படுத்துவோம் பக்குவப்படுத்துவோம்.

'என்னை நோக்கி, 'ஆண்டவரே, ஆண்டவரே' எனச் சொல்பவரெல்லாம் விண்ணரசுக்குள் செல்வதில்லை. மாறாக, விண்ணுலகிலுள்ள என் தந்தையின் திருவுளத்தின் படி செயல்படுபவரே செல்வர்" (மத் 7:21). இயேசுவின் இக்கூற்றையும் மனதில் பதிய வைத்துக் கொள்வோம்.

இறைத்திட்டத்தை நிறைவேற்றுவதில் நம்மை முழுமையாகக் கையளிக்க உண்மையான செப வாழ்வு நம்மைத் தூண்டுவதாக. இதுவே செயல்பாடுகளை உள்ளடக்கிய செப வாழ்வாகும். செபத்தையும் செயல்பாடுகளையும் ஒருங்கிணைத்த மரியா அவர் வழியில் நம்மைக் கரம் பற்றி வழிநடத்துவாராக!





அன்னை மரியாளைப் பற்றிய முதல் குறிப்பு விவிலியத்தில் லூக்கா1:26–30- ல் அவர் நாசரேத்தில் வசித்து வந்ததாகவும் அவருக்கு யோசேப்புடன் திருமண ஒப்பந்தம் செய்யப்பட்டு இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல் வான தூதர் மரியாளுக்கு தோன்றி ''இதோ நீர் கருவுற்று ஒரு மகனை பெறுவீர் அவருக்கு இயேசு என்று பெயரிடுவீர்'' என்று அறிவிக்கின்றார். மேலும் லூக்கா 2:48–ல் 12 வயதில் இயேசு காணாமல் போன போது அவரை ஆலயத்தில் கண்ட மரியா அவரை நோக்கி ''மகனே ஏன் இப்படி செய்தாய் இதோ பார் உன் தந்தையும் நானும் உன்னை மிகுந்த கவலையோடு தேடிக் கொண்டிருந்தோமே'' என்று சொல்வதாக குறிப்புகள் இருக்கின்றன.

மத்தேயு 1:25–ல் மரியா தம் மகனை பெற்றெடுக்கும் வரை யோசேப்பு அவரோடு உறவு கொள்ளவில்லை என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது மத்தேயு 2:11 – ல் வீட்டுக்குள் சென்ற ஞானிகள் இயேசுவை அவரின் தாய் மரியா மடியில் கிடத்திருப்பதைக் கண்டார்கள். என்று சொல்லப்பட்டு இருக்கின்றது

மேலும் மத்தேயு 12:47-ல் இயேசு மக்கள் கூட்டத்தோடு பேசிக் கொண்டிருந்தபோது ஒருவர் அவரை நோக்கி வந்து இதோ உமது தாயும் சகோதரர்களும் உம்மை காண்பதற்கு காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று மரியாளைப் பற்றி குறிப்பிடுகிறார்.

யோவான் 2:1-5-ல் இயேசு கிறிஸ்து கானாவூர் திருமணத்தில் அன்னை மரியின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்து தண்ணீரை திராட்சை இரசம் ஆக்கி தனது முதல் அற்புதத்தை மரியாளின் விருப்பத்திற்கு இணங்க நிகழ்த்திக் காட்டினார் என்பது அறியவருகிறது.

யோவான் 19:26-27-ல் சிலுவையில் அறையப்பட்ட இயேசு, தாயிடம் சீடரைக் காட்டி ''இதோ உமது மகன்'' என்றார் பின் தம் சீடர்களிடம் தனது தாய் மரியாவை காட்டி ''இதோ உன் தாய்'' என்றார், என்று அன்னை மரியாளை குறித்து குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

திருவழிப்பாடு 12:1-ல் வானில் பெரியதோர் அடையாளம் காணப்பட்டது அங்கு பெண் ஒருவர் அவர் கதிரவனை ஆடையாக அணிந்திருந்தார். நிலவு அவருடைய காலடியில் இருந்தது. அவர் பன்னிரு விண்மீன்களை தனது தலையில் சூடியிருந்தார் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இறுதியாக திருத்தூதர் பணிகள் 1:24-ல் அனைவரும் இயேசுவின் சகோதரர்களோடும் அவரின் தாய் மரியாளோடும் ஒன்றாக இணைந்து ஒரே மனத்தோடு இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தார்கள் என சொல்லப்பட்டு இருக்கின்றது.

இப்படியாக மரியாளைப் பற்றி விவிலியத்தில் ஒரு சில குறிப்புகளே இருந்தாலும் அந்த சில குறிப்புகளே நாம் மரியாளை குறித்து முழுவதுமாக தெரிந்து கொள்ள போதுமானதாக இருக்கின்றது. மரியாள் எப்படி தன் நம்பிக்கையாலும் கீழ்ப்படிதலாலும் இறைமகனை பெற்றெடுத்தாரோ அதே நம்பிக்கையோடும் கீழ்ப்படிதலோடும் மரியாளை பின்பற்றி வாழ திருச்சபை நம்மை அழைக்கின்றது. திருச்சபையின் வாழ்வுக்கும் பணிக்கும் சிறந்த முன்மாதிரியாக திகழும் அன்னை மரியாளை திருச்சபையின் தாய் என பக்தி வணக்கத்துடன் ஜெபித்து மகிழ்வோம்.



# பொதுநிலையினரின் பார்வையில் மரியா ⑨

திரு. பரிசுத்தமணி சோழிங்கநல்லூர், சென்னை

## திரு விவிலியத்தில் அன்னை மரியாள்

உருவம் இல்லாத இறைவன் மரியாவின் கருப்பையில் மனித உடல் எடுத்ததால் இவர் இறைவனின் தாய் என்று அழைக்கப்படுகிறார். மரியாள் கிறிஸ்தவர்களால் சிறப்பாக கத்தோலிக்க மற்றும் கிழக்கு மரபு வழி திருச்சபையினரால் மிகவும் மதிக்கப்படுகிறாள். அன்னையின் வாழ்க்கை குறித்த முழுமையான வரலாற்று ஆவணங்கள் நமக்கு சரியாக கிடைக்கப்பெறவில்லை. அன்னையை குறித்த வாழ்க்கை தொகுப்புகளும் நமக்கு முழுமையாக கிடைக்கவில்லை. ஆங்காங்கே தேடி தேடி சேகரிக்கப்பட்ட தொகுப்புகளை கொண்டே அன்னையின் வாழ்க்கை வரலாற்றை ஓரளவு புரிந்து கொள்ள முடிகிறது. விவிலியத்தில் புதிய ஏற்பாட்டில் ஏறக்குறைய 200 வாக்கியங்கள் மட்டுமே அன்னை மரியாவை பற்றி பேசுகின்றன. சீடர்களை போன்று அன்னை மரியா இயேசு கிறிஸ்துவுடன் எப்பொழுதும் உடன் இருக்கவில்லை. லூக்கா நற்செய்தியில் இயேசுவின் பிறப்பை அறிவிக்கும் வேளையில் அவர் நாசரேத்தில் வாழ்ந்ததாக குறிப்பிடப்படுகிறார். அன்னை மரியாவை குறித்து தனியாக தலைமுறை அட்டவணை விவிலியத்தில் தரப்படவில்லை. கிடைக்கப் பெற்றுள்ள தகவல்கள்படி அன்னை மரியா, யூத இனத்தைச் சார்ந்தவர். எலிசபெத்தின் உறவினர் என்ற வகையில் அவர் ஆரோன் குலத்தை சேர்ந்தவர் என்று கூட சொல்லலாம். சகோதர சபையின் பிறப்பிடமாக இருந்த மார்ட்டின் லூதர் அவர்கள் தன் வாழ்நாள் முழுவதும் மரியாவை இறைவனின் தாய் என்ற கருத்தில் மாற்றம் காணாதவராய் இருந்தார். கிறிஸ்தவ நம்பிக்கையின்படி மரியா தூய ஆவியினால் தம் கன்னிமைக்கு எந்தவித பழுதும் ஏற்படாமலேயே இயேசுவை கருத்தாங்கினார்.. கடவுளின் தாய் என்ற கொடையாளும் இயேசுவை பெற்றெடுத்ததாலும் அவரைப் பேணி வளர்த்ததாலும் மரியாள் உடல் ரீதியான, மன ரீதியான நெருக்கத்தை தாண்டி லட்சிய நெருக்கத்தை கொண்டிருந்தார். அதாவது இயேசுவின் இறையாட்சிக் கனவை தனது உள்ளத்தில் சுமந்தவராய் அவரின் இறையாட்சி பண்புகளுக்கு செயல்வடிவம் கொடுத்தவராய் அவர் இயேசுவுடன் மிக நெருங்கிய உறவில் இருந்திருக்கின்றார். அதனால் தான் இயேசுவும், ''இறைதிருவுளம் நிறைவேற்றிய என் அன்னை பேறுபெற்றவர்'' என்பதை சொல்லாமல் சொல்லியிருக்கிறார். கன்னி மரியாளின் திருவயிற்றில் இறைமகன் இயேசு கருவாகி உருவானது போல திருச்சபை வழியாக இறை மக்களின் இதயங்களிலும் கிறிஸ்து பிறந்து வளர அன்னை மரியாள் ஒரு முன் உதாரணமாகத் திகழ்கிறார்.





# அன்னையின் 59 திருத்தலங்களை நோக்கி...

அருள்பணி. சகாயராஜ் ம.ஊ.ச., இத்தாலி.



## அருளின் அன்னை (Madonna of Grace) பேராலயம், மரியாஸ்டெயின் (MARIASTEIN), சுவிட்செர்லாந்து

உலகெங்கும் உள்ள அன்னையின் திருத்தலங்கள் அனைத்தும், அன்னையின் காட்சியின் பொருட்டோ அல்லது அன்னையின் பரிந்துரை செபத்தால் நிகழ்ந்த அற்புதம் ஒன்றின் அடிப்படையிலேயே எழுப்பப்பட்டுள்ளன. சுவிட்செர்லாந்து நாட்டில் புகழ்பெற்ற அன்னையின் திருத்தலமான எயின்செயிடெல்னுக்கு (EINSIEDELN) பிறகு புகழ்பெற்ற திருத்தலமாக விளங்குவது மரியாஸ்டெயின் (MARIASTEIN) திருத்தலமாகும்.

சுவிட்செர்லாந்து நாட்டில் உள்ள முக்கிய நகரமான பாசல் (Basel) நகரிலிருந்து ஏறக்குறைய 20 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. மலைகளும், குன்றுகளும் நிறைந்த இந்த பகுதி காட்டுவழிப்பாதையாகவே விளங்கியுள்ளது. மக்கள் தங்கள் வசதிக்கும், வேகத்திற்கும் ஏற்ப வாகனங்களையும், குறுக்குப் பாதைகளையும் பயன்படுத்தி, தாங்கள் அடைய வேண்டிய இடத்தை அடைந்தனர். அங்ஙனம், தன் இலக்கு நோக்கிய பயணத்தில் இருந்த சிறுவன், மலை முகடுகளைப்பற்றி அறிந்திருக்கவில்லை. அவனுக்கு இருந்த நோக்கம், தான் செல்ல வேண்டிய இடத்தை நேரத்திற்குள் செல்ல வேண்டும் என்பதாக அமைந்து வேகமாக பயணித்தான். வேகத்தில் இருப்பவருக்கு விவேகம் குறைவாக இருக்கும் என்று முன்னோர் கூறுவதுண்டு. அவ்வழக்கின் படி தலைகால் புரியாமல் சென்ற அவன், ஒரு மலை முகட்டிலிருந்து தவறி அதள பாளத்தில் விழுந்தான். அவனுடைய செபமும், உறவினர்களின் ஓலமும் அன்னையின் செவிகளில் விழுந்தது. தன் திருமகனிடம் பரிந்து பேசி, அச்சிறுவன் உடல் நலம் பெறவும், எழுந்து நடக்கும் சக்தியை பெறவும் அருளாசீர் பெற்று தந்தார். இந்நிகழ்வு நடந்த இடத்தில் கற்களான ஒரு ஆலயம் எழுப்பப்பட்டுள்ளது. இந்த குகை கோயிலானது, ஆலயத்தின் அடியில் 56 படிகட்டுகளை கடந்த பிறகு அமைந்துள்ளது. இந்த ஆலயம் தான், இவ்வாலயத்தின் பழம்பெரும் பகுதியாக கருதப்படுகிறது. அன்றலர்ந்த மலர்போல் மலர்ந்த முகத்துடனும்,



அம்முகத்திற்கு முத்தாய்பான புன்னகை, அனைவரையும் சுண்டியிழுப்பதாக உள்ளது. அன்னையின் முகத்தை ஆழ்ந்து தரிசித்த எவரும் அங்கிருந்து மற்ற இடங்களுக்கு செல்ல விரும்பமாட்டார்கள் என்பது உண்மை.

இந்த பழம் கோயிலானது, கி.பி.1480 ஆண்டளவில் நடந்த ஒரு வியத்தகு நிகழ்வின் அடிப்படையில் கட்டப்பட்டுள்ளது. குன்றுகள் நிறைந்த அந்த பகுதியில் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு செல்பவர்கள் பள்ளத்தாக்குகளை கவனித்து நடக்க வேண்டும். மரங்கள் அடர்த்தியாக இருக்கும் காரணத்தினால், வெளிச்சம் குறைவாகவே இருக்கும். பகல் கூட அந்திநேரம் போல்தான் இருக்கும். அப்படிப்பட்ட சூழலில் இளைஞன் ஒருவன் அவ்வழியே சென்றான். நிறைந்த சிந்தனைகளோடு சென்ற அவன் தன் அருகில் இருந்த பள்ளத்தாக்கை கவனிக்காமல் ஒரு அடி எடுத்து வைக்க, கூட வந்தவர்கள், "ஐயோ கவனம் பள்ளத்தாக்கு" என்று கூறிமுடிப்பதற்குள் அவன் பள்ளத்தாக்கின் அடிபாதாளத்திற்கு சென்றுவிட்டான். அவன் நிலை அறியாது, வந்தவர்கள் அனைவரும் முழந்தாள்படியிட்டு தேவதாயிடம் உருக்கமாக வேண்டினர். அபயக்குரலுக்கு செவிமடுக்கும் தாய், தன் பிள்ளைகளின் குரலுக்கு செவிமடுத்தார். தன் திருமகனிடம் பரிந்து பேசி அந்த இளைஞனை எவ்வித ஆபத்தும் இல்லாமல் காப்பாற்றினார். மிகுந்த சிரமங்களுக்கிடையே ஊரார் சிலர் அந்த இளைஞன் விழுந்து கிடந்த இடத்தை அணுகிய போது, ஆச்சரியமும், வியப்பும் அடைந்தனர். அவன் விழுந்த உயரத்திலிருந்து விழுந்த எவரும் உயிர்தப்பியதாக வரலாறு இல்லை. ஆனால், அந்த இளைஞனோ பஞ்சு மெத்தையில் படுத்திருப்பவன் போல எவ்வித காயங்களும் இல்லாமல் இருந்தான். இதை அன்னையின் அற்புதமான செயல் என்று அனைவரும் அன்னைக்கும், இறைமகனுக்கும் புகழ்சாற்றினர். அன்னையின் பிரசன்னத்தை போற்றும் வகையில் கற்களால் ஆன ஒரு சிற்றாலயத்தை அந்த பள்ளத்தாக்கிலேயே கட்டி அன்னைக்கு மரியாதை செய்தனர். இன்றும் ஆலயத்திற்கு கீழ் அமைந்துள்ள சிற்றாலயம் இதுவே. தொடக்க காலத்தில்







இராக்கினி என்றும் வெளிப்படுத்துகின்றன. (பிதாப்பிதாக்களின் இராக்கினியே, அப்போஸ்தலர்களின் இராக்கினி). மேலும் ஐந்து முத்துக்கள் இராக்கினியின் புனிதத்துவத்தையும் தனிச் சிறப்பையும் வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. (சென்ம பாவமின்றி உற்பவித்த அன்னையே, திருச்செபமாலையின் இராக்கினியே).

### திருத்தந்தையர்களும் புகழ்மாலையும்

1571–ம் ஆண்டு மார்ச் 20-ம் நாள் திருத்தந்தை ஐந்தாம் பத்திநாதர் தனது சிறப்பு ஆணையால் அன்னை மரியாவுக்கென்று சிறப்புக் கட்டளை செபங்களையும் மற்றும் புகழ்மாலையையும் தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து 1575-ம் ஆண்டு விவிலியத்திலிருந்து புதிய புகழ்மாலை ஒன்று தயாரானது. அதற்கு இசை அமைத்தவர் லொரேட்அடா பேராலயத்தின் பாடகர் குழுத் தலைவர் கான்ஸ்டான்சோ போர்டோ என்பவர்.

1578-ம் ஆண்டு பிப்ரவரி 5-ம் நாள் லொரேட்டாவைச் சார்ந்த திருத்தொண்டர் ஜீலியோ கண்டோட்டி என்பவர் விவிலியப் பின்னணியில் புனித அன்னைக்கு புதிய புகழ்மாலை ஒன்றை இயற்றி உரோமை புனித பீட்டர் ஆலயத்தில் பாட அனுமதி கேட்டு திருத்தந்தை 13-ம் கிரகோரியாருக்கு எழுதினார். ஆனால் லொரேட்டாவில் மட்டுமே பாட அனுமதிக்கப்பட்டது. விவலிய பின்னணியில் உருவான புகழ்மாலை மக்களிடம் மிகுந்த வரவேற்பை பெறவில்லை. பழமையான லொரேட்டாவின் புகழ்மாலையே மிண்டும் பாடப்பட்டது திருத்தந்தை ஐந்தாம் சிக்ஸ்துஸ் 1587, ஜீலை 11-ம் நாள் தனது ஆணையின் மூலம் இப்பகழ்மாலையை இயேசுவின் புனித நாமத்தின் புகழ்மாலை என்ற தலைப்பில் அங்கீகரித்து உலகெங்கும் பரவச் செய்தார்.

இதைத் தொடர்ந்து அந்த காலத்தில் பாலைவனத்தில் வாழ்ந்த துறவிகள் இயேசு, மரியா மற்றும் புனிதர்கள் மீது பக்தியின் காரணமாக பல புகழ்மாலைகள் எழுதினார்கள். ஆனால் அவைகளில் இறையியல் பிழைகள் மிகுந்து காணப்பட்டதால், 1601-ம் ஆண்டு செப்டம்பர் 6-ம் நாள் திருத்தந்தை எட்டாம் கிளமெண்ட் புதிய புகழ்மாலைகள் இயற்றக் கூடாது என்று ஆணையிட்டார்.

1597-ம் ஆண்டு முதல் உரோமை நகர் முழுவதும் லொரேட்டாவின் புகழ்மாலைப் பாடப்பட்டது. 1664-ம் ஆண்டு திருத்தந்தை ஏழாம் அலைக்சாண்டரின் லொரேட்டாவின் புகழ்மாலையில் புதிய முத்துக்கள் எதையும் சேர்க்க கூடாது என கட்டளையிட்டார் இருந்தபோதும் 1673-ம் ஆண்டு திருவழிபாட்டிற்கான ஆணையம் புகழ்மாலையில் புதிய முத்துக்களைச் சேர்க்க அனுமதி வழங்கியது.

1776-ம் ஆண்டு 13-ம் கிளமெண்ட் ஸ்பெயின் நாட்டிற்கு அனுமதி அளித்தார். பின்னர் 1846-ம் ஆண்டு திருத்தந்தை 9-ம் பத்திநாதர் மெக்லின் ஆயரிடம் ஜென்ம பவாமின்றி உற்பவித்த இராக்கினியே என்று புகழ்மாலையில் சேர்த்துக் கொள்ளுமாறு கூறினார். இவ்வாறு அகில உலகத் திருச்சபை முழுவதும் மரியாவின் புகழ்மாலை விரைவில் வரவேற்பைப் பெற்று மனித குலம் புனித மரியாவின் வழியாக இறைவனைப் புகழ்ந்தது.

மிகவும் பழமையான இந்த புகழ்மாலை பக்தியின் வெளிப்பாடு என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது 59 புகழ்ச்சி சொற்களை அல்லது மன்றாட்டுக்களை உள்ளடக்கியதாக காணப்பட்டது.

புகழ்மாலையின் அமைப்பு மற்றும் பொருளிலிருந்து ஓர் உண்மை புலப்படுகின்றது. அதாவது தனிமனித பக்தியை உற்சாகப்படுத்தவே இந்த மரியின் பகழ்மாலை இயற்றப்பட்டிருக்க வேண்டும் என்று அறியப்படுகின்றது. இயற்கை சீற்றம் மற்றும் உயிர்கொல்லி நோய்களால் மக்கள் அவதிப்படும்போது புனிதர்களின் மன்றாட்டு மாலை பாடுவதை திருச்சபை வழக்கமாகக் கொண்டிருந்தது. உதாரணமாக 15-ம் நூற்றாண்டின் இறுதியில் மக்கள் உயிர்கொல்லி நோயினால் பாதிக்கப்பட்டபோது மரியின் புகழ் மாலை பாடப்பட்டது. அந்த பிரதி வெனிஸ் நூலகத்தில் புனித மாற்க் தேவாலயத்தில் இன்னும் உள்ளதை நாம் அறியலாம். நல்ல கால நிலை அமைய வேண்டியும் செபித்தார்கள். 1820 ஆம் ஆண்டு வெனிஸ் குடியாட்சி முடிவுக்கு வரும்வரை பயன்படுத்தினார்கள்.

**புகழ்மாலையின் அமைப்பு**

புகழ்மாலையின் தொடக்கமாக புனித மரியாளே கடவுளின் ஆலயமே பரலோகத்தின் இராக்கினியே என்று ஒவ்வொரு முறையும் பாடும்போது மக்கள் எங்களுக்காக வேண்டிக் கொள்ளும் என்று பதிலளிக்கும் விதத்தில் அமைந்துள்ளது. புகழ்மாலையின் உள்ளடக்கமே அன்னை மரியின் புகழை எடுத்துரைக்கும் விதமாக அமைந்திருந்தன இதை இயற்றியவர்கள் எட்டாம் நூற்றாண்டில் இருந்த புனிதர்களின் மன்றாட்டு மாலையை மாதிரியாக கொண்டு இயற்றினார்கள்.

புகழ்மாலையின் அமைப்பில் முதன்மையான இடம் மரியாவின் தாய்மையை புகழும் விதத்தில் அமைந்துள்ளது. பின்னர் மரியா மனிதர் மீது கொண்டுள்ள அன்பை எடுத்துக் கூறியும் அடுத்ததாக விசுவாசப் பிரமாணத்தில் அன்னைக்கு வழங்கப்பட்ட தலைப்புபற்றியும் அதைத் தொடர்ந்து இராக்கினி என்ற புகழ்ச்சி வார்த்தைகளும் இடம் பெறுகிறது.

1. மரியாவின் புனிதம்: மரியாவின் புனிதத்தை எடுத்துக் கூறும் புகழ்மாலைகள் (புனித மாதாவே)
2. மரியாள் - ஒரு தாய்: ஒரு தாயின் பல முகங்களை விளக்கும் விதமாக புகழ்மாலையில் சில முத்துக்கள் அமைந்துள்ளன. (கிறிஸ்துவினுடைய மாதாவே, திருச்சபையின் மாதாவே)
3. மரியாள் - ஒரு கன்னி: மரியா தன் கன்னிமையில் பேறுபெற்றவள் என்பதை விளக்கும் வண்ணம் உள்ளது. (தயையுள்ள கன்னியையே, மகா வணக்கத்துக்குரிய கன்னிகையே)
4. மரியா வெளிப்படுத்தியுள்ள அடையாளங்கள்: மரியாவின் பண்புகளை வெளிப்படுத்தும் விதமாக 13 அடையாளங்கள் பழைய ஏற்பாட்டிலிருந்து எடுக்கப்பட்டு புகழ்மாலையின் முத்துக்களாக கோர்க்கப்பட்டுள்ளது. (தாவீதின் உப்பரிகையே, ஞானத்தின் இருப்பிடமே)
5. மரியா - இரக்கத்தின் தாய்: அன்னையின் இரக்கத்தை வெளிப்படுத்தும் விதமாக சில முத்துக்கள் சேர்க்கப்பட்டுள்ளன. (பாவிகளுக்கு அடைக்கலமே, வியாதிகாரருக்கு ஆரோக்கியமே).
6. மரியா – ஒரு இராக்கினி: புகழ்மாலையின் இறுதி 13 முத்துக்கள் மரியாவை புனிதர்களின் இராக்கினி என்றும் பரலோகத்தின்







இச்சிற்றாலயமானது ஆகுஸ்தீனியன் துறவியரால் பராமரிக்கப்பட்டு வந்தது.

ஆண்டுகள் பல கடந்தன. இச்சிற்றாலயம் பக்தர்களின் வருகையால் நிரம்பி வழிந்தாலும் பராமரிப்பின்றி பழுதுபட்டு காணப்பட்டது. அச்சூழலில், கி.பி. 1648ஆம் ஆண்டு இங்கு புனித பெனடிக்ட் சபை துறவியர் தங்களின் துறவு இல்லம் ஒன்றை அமைக்க முடிவெடுத்தனர். அவ்வமயம், பழுதடைந்துக்கொண்டிருந்த பெய்ன்வெல் துறவற இல்லத்திலிருந்து கற்களை கட்டுமான பொருட்களாக பயன்படுத்தி இந்த புதிய துறவற இல்லத்திற்கான அஸ்திவாரத்தை எழுப்பினர். அதன்மேல் எழுப்பபட்ட பெனடிக்டைன் துறவற குழுமமானது எண்ணிக்கையிலும், துறவற வாழ்விலும் சிறந்து விளங்கியது. அத்துடன் மரியாஸ்டைனுக்கு வருகைபுரிந்த திருப்பயணிகளுக்கு சிறந்த சேவையாற்றியது. இறையருளையும், மனஅமைதியையும் தேடிவரும் திருப்பயணிகளின் எண்ணிக்கையும் அதிகரிக்க ஆரம்பித்தது.

கி.பி. 1789 ஆண்டில் ஏற்பட்ட பிரெஞ்ச் புரட்சி இத்திருத்தலத்திலும், இங்கு துறவியரின் வாழ்க்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது என்று சொன்னால் ஒருவேளை நாம் ஆச்சரியம் அடையலாம். பிரெஞ்ச் புரட்சியின் காரணமாக பிரான்சு தேசத்தில் கத்தோலிக்க மதம் பல்வேறுவிதமான பின்னடைவுகளைச் சந்தித்து கொண்டிருந்த நேரம். திருமணம், திருமுழுக்கு போன்ற திருவருட்சாதனங்களை பெற மக்கள் மிகவும் சிரமப்பட்டார்கள். அவர்களில் பலர் எல்லைகடந்து இத்திருத்தலத்திற்கு வந்து இத்திருவருட்சாதனங்களைப் பெற்றனர். பிரென்ச் அரசாங்கம் அதை கண்டித்தது. இத்திருத்தலத்தின் பராமரிக்கும் பொறுப்பிலிருந்த பெனடிக்டைன் துறவிகளை தடைசெய்யவேண்டும் என்று கூறியது. பிரெஞ்ச் அரசாங்கத்தின் அழுத்தத்தின் காரணமாக



பாசல் மாகாண அரசாங்கம் கி.பி. 1792ஆம் ஆண்டு துறவிகளை திருத்தல பொறுப்பிலிருந்து நீக்கி, ஒரு மாகாண கவர்னரை நியமித்தது. கி.பி. 1798ஆம் ஆண்டு பல்தசார் அலெக்ஸிஸ் ஹென்றி என்ற பிரெஞ்ச் படைத்தளபதியின் தலைமையிலான படை மரியாஸ்டைன் மீது படையெடுத்தது. ஆலயத்தை முற்றிலுமாக சூறையாடியதுடன், துறவிகளையும் நாடுகடத்தியது.

கி.பி. 1799ஆம் ஆண்டு பிரெஞ்ச் புரட்சி முடிந்தவுடன், கி.பி. 1802ஆம் ஆண்டு துறவிகள் மீண்டும் மரியாஸ்டைன் திரும்பினர். பிரெஞ்ச் படையால்



சூறையாடப்பட்டிருந்த தங்களது துறவற இல்லத்தை மீட்டெடுக்க ஆரம்பித்தனர். கி.பி. 1834ஆம் ஆண்டு, வானுயர்ந்த நிற்கும் தூண்களைக் கொண்ட மிகப்பெரிய ஆலயத்தை கட்ட ஆரம்பித்தனர். ஆலயமானது அருகாமையில் இருந்த சுண்ணாம்பு பாறைகளிலிருந்து எடுக்கப்பட்ட கற்களால் கட்டப்பட்டது. கோதிக் கட்டிட கலையில் மூன்று பகுதிகளை கொண்ட ஆலய முகப்பாக அமைந்துள்ளது. ஆலயத்தின் உள்பகுதியில் மேற்கூரை முழுவதும் பரோக் கட்டிட பாணியில் பல வளைவுகளையும், விவிலிய ஓவியங்களால் காண்போரின் கண்களை கவர்ந்திழுப்பதாக உள்ளது. புதிதாக கட்டப்பட்ட ஆலயமானது அப்பகுதி முழுமைக்கும் மிகப்பெரிய வரப்பிரசாதமாக அமைந்திருந்தது.

மரியாஸ்டைன் திருத்தல வரலாறானது பெனடிக்டைன் துறவியரின் வரலாற்றோடு பின்னிப்பிணைந்திருக்கிறது என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். திருஅவைக்கும் ஐரோப்பாவின் பல அரசாங்கங்களுக்கும் இடையே பல்வேறு விதமான பிரச்சினைகளும், அதன் காரணமாக ஒருவர்மற்றவர் மீதான தடைகளுக்கும் பஞ்சமே இல்லை. சுவிஸ் நாட்டில் அனைத்து கிறிஸ்தவ பிரிவினருக்கு அளிக்கப்பட்ட சுதந்திரமும், ஒவ்வொரு குடிமகனும் தங்கள் மனச்சாட்சியின்படி விரும்பிய மதத்தை கடைபிடிக்கலாம் என்கிற சட்டமும் கி.பி. 1798ல் நடைமுறைப்படுத்தப்பட்ட ஹெல்விக் சட்டத்தின்படி நடைமுறைக்கு வந்தது. அதன் பிறகு, கி.பி 1848 மற்றும் கி.பி. 1874ஆம் ஆண்டுகளில் சமய குழுக்கள் மற்றும் திருச்சபை சட்டங்கள் குறித்த சீர்திருத்தங்கள் நடைமுறைக்கு வந்தன. இத்தகைய சட்டங்கள் சுவிஸ் அரசாங்கத்திற்கும் திருஅவைக்குமான உறவுகளில் விரிசல்களை ஏற்படுத்தின. எனவே, இரண்டாம் முறையாக மரியாஸ்டைன் துறவிகள் சுவிஸ் நாட்டைவிட்டு வெளியேற வேண்டிய சூழல் ஏற்பட்டது. தங்களின் மனதுக்கு நெருக்கமான அன்னையின் திருத்தலத்தை விட்டு வெளியேறிய துறவிகள் முதலில் பிரான்சு தேசத்திலும், பிறகு ஆஸ்திரியா நாட்டிலும் வாழ்ந்தனர்.



உலக வரலாற்றை திருப்பிப்போட்ட முதல் மற்றும் இரண்டாம் உலகப் போர் காலங்களில் இத்துறவியர் ஆஸ்திரியா நாட்டில் வாழ்ந்தனர். ஜெர்மனி நாசிப்படையால் ஆஸ்திரியா ஆளப்பட்டு



ஆகட்டும்



# மாதா மன்றாட்டு மாலை

1



அருள்பணி. லூர்துசாமி ம.ஊ.ச.
நவதுறவியர் இல்லம், மாமல்லபுரம்.

### விவிலிய இறையியல் விளங்கலுடன்

அன்புள்ள வாசகர்களே இன்றைய இதழிலிருந்து ஒரு புதிய முயற்சியை ஆரம்பிக்கின்றோம். 12 ஆண்டுகளுக்கு முன்பு புனித பேதுரு பாப்பிறை குருமட திருத்தொண்டர்கள் உருவாக்கிய தாயே எங்கள் தஞ்சமே என்ற நூலிலிருந்து ஒரு மன்றாட்டு மாலையை எடுத்து ஆய்வுசெய்து அதனுடன் என் கருத்துக்களையும் இணைத்து தர விரும்புகின்றேன். செபமாலையுடன் தொடர்ந்து மன்றாட்டு மாலையும் செபிக்கின்றோம். இனிமேல் விவிலிய இறையியல் விளக்கங்களுடன் பொருளுணர்ந்து செபிப்போம்.

### மன்றாட்டு மாலை தோன்றிய விதம்

நாம் தற்போது பயன்படுத்தும் மரியாவின் புகழ்மாலை அல்லது மன்றாட்டு மாலை 1587–ம் ஆண்டு திருத்தந்தை ஐந்தாம் சிக்ஸ்துவால் (Sixtus V) திருச்சபையில் அங்கீகரிக்கப்பட்டது. ஆனால் மரியாவின் புகழ்மாலை தோற்றம் மற்றும் அதன் தொடர் வளர்ச்சிக்கான எந்தவொரு எழுத்துப் பூர்வமான ஆதாரம் இல்லை என்று அறிஞர்கள் கூறுகின்றனர். ஆனால் சில வரலாற்று அறிஞர்கள் புகழ்மாலையின் தோற்றம் 687 ஆம் ஆண்டு எனவும் சிலர் புனித பெரிய கிரகோரியாரின் காலம் (540-640) எனவும் மற்றும் சிலர் ஐந்தாம் நூற்றாண்டு எனவும் கருதுகின்றனர். ஆனால் சிலர் அப்போஸ்தலர்களுக்குப் பிறகு வந்த திருச்சபையின் தந்தையர் காலத்திலே அதன் அடிப்படைக் கருத்துக்களும், சில மன்றாட்டு மாலைகளும் ஆரம்பித்திருக்கலாம் என எண்ணுகின்றனர்.

ஆனால் வரலாற்று அறிஞர்களின் சீரிய தேடலில் புகழ்மாலையின் தொடக்கம் 15-ம் நூற்றாண்டுதான் என நிரூபணம் ஆகியுள்ளது. ஜெர்மனியில் கண்டுபிடிக்கப்பட்ட டிலிங்ஞன் (Dilligen) என்ற புகழ்மாலைதான் மிகவும் பழமையான அச்சிடப்பட்ட புகழ்மாலையாகும் இதை வெளியிட்டவர் முத்திபேறுபெற்ற கனிசியுஸ் என்று கணிக்கப்படுகின்றது.

15-ம் நூற்றாண்டின் இறுதியில் காணப்பட்ட பல புகழ்மாலைகளை மூலதனமாகக் கொண்டு இயற்றப்பட்ட பொதுவான புகழ்மாலைதான் லொரேட்டோவின் புகழ்மாலை பின்னர் 16-ம் நூற்றாண்டில், லொரேட்டாவின் புனித ஸ்தலத்திற்கு வந்து சென்ற பக்தர்களிடையே இந்த புகழ்மாலை மிகுந்த வரவேற்பை பெற்றது. பின்னர் கிறிஸ்தவ நாடுகள் முழுமையும் இப்புகழ்மாலை பரவலாயிற்று. திருச்சபையில் இறுதிஅங்கீகாரத்தை 1587-ல் திருத்தந்தை வழங்கி இச்செபத்தை அங்கீகரித்தார்.

ஆகட்டும்



## வணக்கத்துக்குரிய ஜோசப் பெனெத்தி O S M



அருட் சகோ. பிலிப் ஜோஸப் ம.ஊ.ச

இவர் 1799 ஆம் ஆண்டு இத்தாலியில் உள்ள போலொஞ (Bologna) நகரில் பிறந்தார். சிறுவயதியில் இருந்தே தன் பெற்றோர்களால் இறைஞானத்தில் வளர்க்கப்பட்டார். தன்னுடைய 10 ஆம் வயதில் ஒரு மிகவும் கொடிய நோயினால் தாக்கப்பட்டார். இந்த வயதுவரை அவர் நற்கருணை அருட்சாதனத்தை பெறவில்லை. இருந்தாலும், இவர் இறக்கும் தருவாயில் ஒருமுறையாவது நற்கருணை கொடுக்கலாம் என்று முடிவு செய்து, அவருக்கு நற்கருணை கொடுத்து, நல்ல மரணம் அடைய அனைவரும் வேண்டினர். ஆனால், கடவுளின் அருளால், அவர் நல்ல சுகமடைந்தார். தன்னுடைய வாழ்க்கையை இறைவனுக்காக அர்ப்பணிக்க முடிவு செய்தார். 1818 ஆம் ஆண்டு நல்ல ஆன்மிக பயிற்சிக்குப் பின் இயேசு சபையின் நவதுறவு இல்லத்திற்கு சென்று தனது துறவு வாழ்க்கையை ஆரம்பித்தார். ஆனால், சிறிது காலத்திலேயே, அவருக்கு மீண்டும் உடல் நிலை மோசமானதால், வீடு திரும்பினார். இருந்தாலும், இறைவனுக்கு அர்ப்பணிக்கும் ஆர்வம் அவரை விடவில்லை. எனவே, போலொஞ மறைமாவட்டத்தில் சேர்ந்து, 1822 ஆம் ஆண்டு தன்னுடைய 23 ஆம் வயதில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். இந்த நகரில், மரியின் ஊழியர் சபையின் ஆலயத்தில், வியாகுல தாயானா நம் அன்னை மரியாளுக்கு சிறப்பான பக்தி முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதை அறிந்து, பல நேரங்களை நம் ஆலயத்தில் கழிக்க ஆரம்பித்தார். வியாகுல அன்னையின் ஆன்மிகத்தை உள்வாங்கி அதனை சமூகத்தில் பிரதிபலிக்க ஆசைப்பட்டார். எனவே, 1864 ஆம் ஆண்டு மரியின் ஊழியர் மூன்றாம் சபையில் சேர்ந்து, 1865 ஆம் ஆண்டு தன்னுடைய வார்த்தைப்பாட்டை எடுத்தார். வியாகுல அன்னை எவ்வாறு சிலுவையின் அடியில் நின்றார்களோ, அதேபோல், சமூகத்தில் ஒடுக்கப்பட்டோர்களுக்காக தன்னை அர்ப்பணித்தார். அவர் ஒரு குருவாக பணி செய்யாத துறையே இல்லை என்று நாம் கூறலாம்: இளையோர் பணி, மருத்துவப் பணி, ஏழைமக்களுக்கான பணி.... இவ்வாறு தன்னுடைய இறுதிநாள் வரை மக்களுக்ககாக பணி செய்தார். இவர் வாழ்ந்த காலக்கட்டத்தில், இந்த நகரில், குருக்களை யாரும் மதிப்பதில்லை. ஆனால், இவர் பெயரைச் சொன்னால், அவர் மட்டும் தான் உண்மையான இறைப்பணியாளர் என்று மக்கள் கூறியதாக வரலாற்று குறிப்புகள் கூறுகின்றன. 1889 ஆம் ஆண்டு ஜனவரி 4 ஆம் நாள் தன்னுடைய 90 ஆவது வயதில் இறைவனடி சேர்ந்தார். அவருடைய விருப்பத்தின்படியே, மரியின் ஊழியர் ஆடையை அணிவித்து அவரை அடக்கம் செய்தார்கள். 10 ஆம் வயதிலேயே மரணப்படுக்கையில் இருந்த இவர், நற்கருணை பெற்றுக்கொண்டதின் மூலம், 90 வயது வரை இறைப்பணி செய்ய அவருக்கு அருள் கிடைத்தது. நற்கருணை நம்மை குணமாக்கும் ஒரு அருமருந்து என்பதற்கு இவருடைய 90 வருட வாழ்க்கை ஒரு எடுத்துக்காட்டு.



ஆகட்டும்





கொண்டிருந்த காலமது. துாணிலும் இருப்பார், துரும்பிலும் இருப்பார் என்பது போல எங்கு நோக்கினும் நாசிப்படையில் இரகசிய போலீசார் ஊடுருவி இருந்தனர். துறவியரின் வாழ்வுமுறை பெர்□ன்ஸ் பகுதி மக்களை வாழ்வித்து கொண்டிருந்ததை அறிந்த அவர்கள், அத்துறவியரை வெளியேற உத்தரவிட்டனர். உலகம் உருண்டை என்பதை போல, அத்துறவியர் தங்களின் ஆன்மீக இல்லமான மரியான்ஸ்டைனுக்கே திரும்பி வந்தனர். கி.பி. 1941ஆம் ஆண்டு சுவிஸ் அரசாங்கமானது அவர்களுக்கு அடைக்கலம் அளித்ததோடு, அத்திருத்தலத்தின் பராமரிக்கும் பொறுப்பையும் அவர்களிடம் மீண்டும் அளித்தது.

கி.பி. 1970ஆம் ஆண்டு பொதுவாக்கெடுப்பிற்கு பிறகு, கி.பி. 1971ஆம் ஆண்டு ஜீன் மாதம் 21ஆம் தேதி மரியாஸ்டைன் திருத்தலமானது பெனடிக்டைன் துறவியரின் பராமரிப்பிற்கு மீண்டும் அதிகாரப்பூர்வமாக அளிக்கப்பட்டது. மீண்டும் பணிப்பொறுப்பை ஏற்று, ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளுக்கு பின்னும் இத்திருத்தலமானது வயதுமுதிர்ந்த துறவியரால் அற்புதமாக பராமரிக்கப்படுகிறது. உலகெங்கும் உள்ள பெனடிக்டைன் மடாலயங்களை போலவே, பழமைவாய்ந்த நூலகம், பரந்து விரிந்து கிடக்கும் வயல்வெளிகள், திருப்பயணிகள் தங்கும் இடம், தோட்டம் என அனைத்து இடங்களிலும் பணிபுரிவதோடு திருப்பயணிகளை இன்முகத்துடன் வரவேற்று அவர்களின் ஆன்மீகத் தேவைகளையும் பூர்த்திசெய்கின்றனர்.

இலங்கை தமிழர்களை இருகரம் விரித்து அழைத்து, அரவணைத்து கொண்ட நாடுகளுள் சுவிஸ் நாடும் ஒன்றாகும். புலம்பெயர்ந்த தமிழர்கள், அதுவும் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் தங்கள் நாட்டில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் மடுமாதாவை ஒரு போதும் மறப்பதில்லை என்பதை, மரியாஸ்டைன் திருத்தலத்தில் கொண்டாடப்பட்ட மடுமாதா திருவிழா எண்பித்தது. சுவிஸ் நாடு முழுவதும் ஒரே தமிழ் பணியகமாக, ஒரு இலங்கை தமிழ் குருவால் நிர்வகிக்கபடுகிறது. இத்திருத்தலத்தில் கோலாகலமாக கொண்டாப்பட்ட மடுமாதா திருவிழா, அதற்கான விரிவான முன்தயாரிப்புகள், நேர்த்தியான முறையில் தயாரிக்கப்பட்ட வழிபாடு, இனிமையான பாடல்களை பாடி இறைவனை போற்றிய பாடகற்குழு, அன்னையின் திருஉருவம் தாங்கிய தேர்பவனி என மண்வாசனை நிறைந்ததாக அமைந்திருந்தது.

மரியாஸ்டைன் திருத்தலத்தை தரிசிக்கவும், மடுமாதா திருவிழாவில் பங்கேற்கவும் வாய்ப்பை ஏற்படுத்தி தந்த திருவாளர். ஜான்-ஜீலி, திருவாளர். வதனன் மற்றும் திருவாளர். ஜோசப்-ராணி குடும்பத்தினருக்கு என் மனமார்ந்த நன்றிகளை உரித்தாக்குகிறேன்.


திருப்பயணம் தொடரும்...........

ஆகட்டும்

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி
## விடுதலை பயணம் 1 - 20



ச. பெ. அமல்ராஜ். ம.ஊ.ச.பொ.நி, திருச்சி - 21



**வலமிருந்து இடம்**

1) அவன் தன் குடிமக்களை நோக்கி, இதோ, ……….. மக்களினம் நம்மை விடப் பெருந்தொகையதாயும் ஆள்பலம் வாய்ந்ததாயும் உள்ளது.
3) மேலும் ஆண்டவர் அவரை நோக்கி, உன் கையை உன் ……….. இடு என்றார். அவ்வாறே அவர் தம் கையைத் தம் மடிக்குள் இட்டார்.
5) இல்லையெனில் இம்முறை கொள்ளைநோய்களை எல்லாம் உன்மேலும் உன் ………. மேலும் உன் குடிமக்கள்மேலும் நானே ஏவி விடுவேன். இந்நாடெங்கும் எனக்கு நிகர் யாருமே இல்லை என்பதை இதனால் நீ அறிந்து கொள்வாய்.
9) இஸ்ரயேல் மக்கள் அங்கு வாதாடியதாலும் ஆண்டவர் தம்மோடு இருக்கிறாரா இல்லையா என்று சோதித்ததாலும், ………… மாசா என்றும் மெரிபா என்றும் பெயரிட்டழைக்கப்பட்டது.
12) வைக்கோல் உள்ளபோது செய்துவந்த அளவில் ஒவ்வொரு நாளுக்கும் உரிய வேலையை அன்றே முடித்துவிடுங்கள்………..கூறி, வேலை வாங்கும் அதிகாரிகள் அவசரப்படுத்தினர்.

**இடமிருந்து வலம்**

2) எங்கள் கடவுளாகிய ஆண்டவருக்குப் பலியிடுமாறு எங்களை நீர் போகவிடும்………. கொள்ளை நோயாலோ வாளாலோ அவர் எங்களைத் தாக்கிவிடுவார் என்று கூறினர்.
4) அவ்வாறே ஆண்டவரும் செய்து முடித்தார். ஈக்கள் பார்வோன் வீட்டிலும்,………. அலுவலர் வீட்டிலும், எகிப்துநாடெங்கும் திரளாய்ப் பெருகின. ஈக்களால் நாடே பாழாகிவிட்டது
6) அப்போது உன் பணியாளர்களாகிய இவர்கள் எல்லோரும் எனக்குப் பணிந்து என்முன் தலைவணங்கி நின்று, உம்மைப் பின்பற்றும் மக்கள் அனைவரோடும் நீர் வெளியேறிவிடும் என்று………….

விடைகள் அனுப்ப இறுதி நாள் 25-11-2023





ஊனியல்பின் இச்சையையும் உதறித்தள்ளிவிட்டு கடவுளை மட்டும் பற்றிக்கொள்வதுதான் உண்மையான மனமாற்றம். தன்னைப் பற்றி முழுமையாக ஆய்வு செய்து, நான் இதுவரை எப்படி வாழ்ந்திருக்கிறேன் இனிமேல் எப்படி வாழவேண்டும் என்று ஆய்வு செய்து தன் வாழ்க்கையில் படிப்படியாக முன்னேறி புனிதத்தை அடைவதுதான் உண்மையான மனமாற்றம். பாவத்தில் வாழ்ந்தோம் என்றால் பாவத்தை விட்டுவிட்டு நல்லதோர் வாழ்க்கை வாழ வேண்டும். மிகவும் நல்ல வாழ்க்கையை வாழ்பவர்கள் இன்னும் கொஞ்சம் மேலே சென்று புனித வாழ்க்கை வாழ வேண்டும். புனித வாழ்க்கை வாழ்பவர்கள் இன்னும் கொஞ்சம் மேலே சென்று கடவுளை அடையவேண்டும். இன்னும் கொஞ்சம், இதற்கும் மேலாக என்று நம் வாழ்க்கையானது கடவுளை நோக்கி உயர்ந்துகொண்டே இருக்க வேண்டும். அதுதான் உண்மையான மனமாற்றம். அத்தகைய மனமாற்றத்திற்காக இறைவனிடம் வேண்டுவோம் இந்நாளில்.

### முதல் வாசக முன்னுரை

இறைவன் ஆற்றலுடன் வருகின்றார். அவருடைய வருகையின் போது பள்ளத்தாக்குகள் நிரப்பப்படும். குன்றுகள் தாழ்த்தப்படும். எல்லா இனத்து மக்களையும் அவர் ஒன்று சேர்ப்பார். சோர்வுற்றோரை தம் தோளின் மீது தூக்கி சுமப்பார் என்று இறைவாக்கினர் எசாயா கூறும் வார்த்தைக்கு செவிகொடுப்போம்.

### இரண்டாம் வாசக முன்னுரை

கடவுளுடைய வருகைக்காக காத்திருக்கும் மக்கள் பாவத்திலிருந்து விடுபட்டு மாசுமறுவற்றவர்களாகவும், எல்லாருடனும் நல்ல உறவை ஏற்படுத்தியும் வாழ வேண்டும். ஏனெனில், யாரும் அழிந்துபோகாமல் மனமாற்றம் பெற வேண்டும் என்பதே கடவுளின் திருவுளம். நம்முடைய மனமாற்றத்திற்காக பொறுமையோடு காத்திருக்கும் கடவுளின் நம்பிக்கையை வீணாக்காமல் விரைவில் மனமாற்றம் பெறுவோம் என்னும் உறுதியோடு இவ்வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

### மன்றாட்டுக்கள்

1. எங்களைப் படைத்தாளும் இறைவா, எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் அனைவரையும் ஆசீர்வதியும். தாங்கள் பெற்றுக்கொண்ட அழைப்பிற்கேற்ப தங்கள் திருப்பணிகளைத் திறம்படச் செய்ய தேவையான அருளைத் தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.
2. அன்பின் இறைவா, உம் பிள்ளைகளாகிய நாங்கள் எங்கள் பாவ வாழ்க்கையை விட்டு விட்டு உம்முடயை அழைப்பை ஏற்று நல்லதொரு மனமாற்றம் பெற்று வாழத் தேவையான அருளைத் தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்
3. குடும்பத்தின் தலைவரே இறைவா, திருமணம் என்னும் அருட்சாதனம் பெற்று குழந்தை வரத்திற்காக பல ஆண்டுகளாகக் காத்திருக்கும் தம்பதியர்களை ஆசீர்வதியும். அவர்கள் மீது இரக்கமும் பரிவும் கொண்டு குழந்தை செல்வத்தைக் கொடுத்து குடும்பத்தை மகிழ்ச்சியால் நிரப்ப வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.
4. நல் மருத்துவரே இறைவா, தொற்று நோயினாலும், உயிர்க்கொல்லி நோயினாலும் பாதிக்கப்பட்டோரை ஆசீர்வதியும். மருத்துவர்கள் வழியாக நீர்தாமே அவர்களைக் குணப்படுத்தி உடல் சுகம் தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

பெருகும் என்று தூய பவுலடியார் கூறும் நம்பிக்கையின் வார்த்தைக்கு செவிகொடுத்து உறுதியான நம்பிக்கையோடு இரண்டாம் வருகைக்காக காத்திருப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களை நேர்வழியில் நடத்தி உம் திருமகனின் இரண்டாம் வருகைக்காக அவர்களைத் தயாரிக்கும் நல்ல தலைவர்களாக விளங்கச் செய்ய வேண்டும் என்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

2. நீதியின் இறைவா, உம் மக்களை ஆளும் உலகத் தலைவர்களுக்காக வேண்டுகின்றோம். அவர்கள் சுயநலம் மறந்து பொதுநலத்தோடும், நேர்மையோடும் மக்களை வழிநடத்த தேவையான அருளைத் தர வேண்டும் என்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

3. நல் வழிகாட்டியே இறைவா, எம் பங்கிலுள்ள இளைஞர் இளம் பெண்களுக்காக மன்றாடுகின்றோம். அவர்கள் நன்மை எது, தீமை எது என்பதை அறிந்து தெளிந்து தூய ஆவியானவரின் துணையோடு தீமையானதை விலக்கி நன்மையைத் தேர்ந்தெடுத்து எதிர்கால வாழ்வை வளமையான வாழ்வாக அமைத்துக் கொள்ள தேவையான அருளைத் தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

4. மருத்துவரே இறைவா, பல்வேறு நோய்களினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் சகோதர சகோதரிகளுக்காக வேண்டுகின்றோம். நீர்தாமே அவர்களைத் தொட்டு ஆசீர்வதித்து குணப்படுத்த வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

## திருவருகைக் காலத்தின் 2ஆம் ஞாயிறு(10.12.2023)
### (எசா 40:1-5,9-11; 1பேது 3:8-14; மாற் 1:1-8)

**திருப்பலி முன்னுரை**

இறையேசுவில் பிரியமனவர்களே, இன்று கலாச்சாரம் சீரழிந்து கொண்டிருக்கின்றது. பெண்கள் ஆண்களைப் போல உடையணிகின்றார்கள். ஆண்கள் பெண்களைப் போல காதணி அணிகின்றார்கள். முடியை நீளமாக வளர்க்கிறார்கள். இத்தகைய கலாச்சார சீரழிவிலே நாம் ஒருவர் மற்றவரை குறை சொல்லிக் கொண்டிருக்கிறோம். பெரியவர்கள் சிறியவர்களைப் பார்த்து இன்றைய தலைமுறை சரியில்லை என்று சொல்கிறார்கள். சிறியவர்கள் பெரியவர்களைப் பார்த்து பெரியவர்களுடைய பேச்சு சரியில்லை, போக்கு சரியில்லை என்று குறை சொல்லுகிறார்கள். இப்படி ஒருவர் மற்றவர் மீது குற்றம் சுமத்திக் கொண்டிருக்கின்றோம். இந்த உலகம் சரியில்லை. மக்கள் சரியில்லை. சமுதாயம் சரியில்லை என்று குற்றம் சுமத்திக் கொண்டிருக்கின்றோம். உலகம் மாற வேண்டும். இளைய தலைமுறை மாற வேண்டும் என்று நாம் ஆசைப்படுகின்றோம். உலகம் மாற வேண்டுமென்றால் நாம் ஒவ்வொருவரும் மாற வேண்டும். ஒவ்வொரு தனிமனிதனும் மனம் மாறுகின்ற பொழுதுதான் உலகத்திலே, சமுதாயத்திலே, நாம் வாழுகின்ற இடத்திலே மாற்றம் நடைபெறும் என்பதை இன்றைய மூன்று வாசகங்களும் நமக்கு எடுத்துச் சொல்கின்றன. திருவருகைக் காலத்தின் இரண்டாம் ஞாயிற்றுக்கிழமை நாம் வாசிக்கின்ற இறை வார்த்தை நம் ஒவ்வொருவரையும் மனமாற்றம் பெற அழைப்பு விடுக்கின்றது. மனமாற்றம் என்பது நாம் அனைவருமே கடவுளைப் பற்றிக்கொள்ள வேண்டும் என்பதாகும். உலக ஆசையையும்,





7) இஸ்ரயேல் மக்கள் திரும்பிச் சென்று மிக்தோலுக்கும் பாகால் செபோனின் அருகிலுள்ள ……….. இடையே அமைந்த பிசுகிரோத்துக்கு எதிரே கடல் அருகில் பாளையம் இறங்கும்படி அவர்களிடம் சொல்.

10) மேலும், எனக்கு நீங்கள் குருத்துவ……….., தூய மக்களினமாகவும் இருப்பீர்கள். இவ்வார்த்தைகளே நீ இஸ்ரயேல் மக்களிடம் கூற வேண்டியவை' என்றார்.

11) மோசே தம் மாமனார் இத்திரோவிடம் திரும்பிச்சென்று, அவரை நோக்கி, 'எகிப்தில் உள்ள என் இனத்தவரிடம் நான் திரும்பிப் போகவும், அவர்கள்………. உயிரோடு இருக்கிறார்களா என்று பார்க்கவும் வேண்டும்

**மேலிருந்து கீழ்**

1) அதன் மேல் அவள்………… கொண்டாள். 'இது எபிரேயக் குழந்தைகளுள் ஒன்று' என்றாள் அவள்

2) மோசே ஆண்டவரிடம் பேசி, 'இஸ்ரயேல் மக்களே எனக்குச் செவி சாய்க்காதிருக்க, பார்வோன் எவ்வாறு எனக்குச் செவிசாய்க்கப் போகிறான்? நானோ பண்பட்ட உதடுகள்……….என்று சொன்னார்..

5) ஆண்டவர் பார்வோனின் மனம் இறுகிப்போகச் செய்தார். ……….இஸ்ரயேல் மக்களைப் போகவிடவில்லை.

6) நீங்கள் கேட்டபடியே உங்கள் ஆட்டுமந்தையையும் உங்கள் மாட்டு மந்தையையும் கூட்டிக்கொண்டு செல்லுங்கள். போய்விடுங்கள்: எனக்கும் ஆசி……….. என்றான்.

9) மேலும், மக்கள் ………. திறமையும், இறையச்சமும், நாணயமும் கொண்டு கையூட்டை வெறுக்கும் பண்பாளரைக் கண்டுபிடியும். அவர்களை ஆயிரமவர், நூற்றுவர், ஐம்பதின்மர். பதின்மர் ஆகிய குழுக்களின் தலைவர்களாக நியமிப்பீர்.

12) ஆயினும் இதுவரை அவர்கள் அறுத்துக் கொடுத்த அளவு செங்கல் தயாரித்துக் கொடுப்பது அவர்கள் கடமை. அதிலிருந்து ………. குறையக்கூடாது. ஏனெனில், அவர்கள் சோம்பேறிகள்.

**கீழிருந்து மேல்**

3) கடவுள் மோசேயை நோக்கி, 'இருக்கின்றவராக இருக்கின்றவர் நானே' என்றார். மேலும் அவர், 'நீ இஸ்ரயேல் ……….. இருக்கின்றவர் நானே' என்பவர் என்னை உங்களிடம் அனுப்பினார் என்று சொல்' என்றார்

4) கையிலுள்ள கோலால் நானே நைல்நதி நீரை ……….. அது இரத்தமாக மாறும்.

7) மேலும் யோசேப்பின் எலும்புகளை மோசே தம்மோடு எடுத்துச் சென்றார். ஏனெனில்,………. உங்களைச் சந்திக்கும்போது இங்கிருந்து என் எலும்புகளை உங்களோடு எடுத்துச் செல்லுங்கள்' என்று யோசேப்பு இஸ்ரயேல் மக்களிடம் கூறி, அதுபற்றி அவர்களிடம் உறுதிமொழி பெற்றிருந்தார்.

8) ஆனால் ஆறாம் நாளில் அப்பத்தை இரட்டிப்பாக, அதாவது தலைக்கு நான்கு படி வீதம் சேகரித்துக் கொண்டனர். கூட்டமைப்பின் தலைவர்கள்………. மோசேயிடம் வந்து இதுபற்றி அறிவித்தனர்.

10) ஏனெனில், ஆண்டவர் ஆறு நாள்களில் விண்ணுலகையும், மண்ணுலகையும், கடலையும், அவற்றிலுள்ள ……….. படைத்து ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார். இவ்வாறு ஆண்டவர் ஓய்வு நாளுக்கு ஆசிவழங்கி அதனைப் புனிதப்படுத்தினார்.

11) இப்போது, இதோ! இஸ்ரயேல் மக்களின் அழுகுரல் என்னை எட்டியுள்ளது. மேலும் எகிப்தியர் அவர்களுக்கு ………. கொடுமையையும் கண்டுள்ளேன்.

13) அருஞ்செயல் ஒன்று காட்டி உங்களை மெய்ப்பியுங்கள்' என்று பார்வோன் உங்களை நோக்கிக் கூறினால் நீ ஆரோனிடம், 'உன் கோலை எடுத்து, பார்வோன் முன்னிலையில் விட்டெறி. அது பாம்பாக மாறும் ……… சொல்' என்றார்.

# அன்னை இருக்க பயமேன்? 7



கலைச்சுடர் முனைவர். ஜோ. விண்ணரசன், மேல்வழி

கல்யாண விருந் தொன்றில்
குறை களைந்த அன்னையவர்
கல்லறை செல்லும் அன்று – நம்
குறை களைய மாட்டாரோ?

அழிந்து போகும் உடல்களுக்கே
அடைக்கலம் தரும் அன்னையவர்
அழிந்து போகா ஆன்மாக்களுக்கு
அவயம் தர மாட்டாரோ?

அழு தடையும் குரல்களுக்கு
விரைந்து பேசும் அன்னையவர்
பழு தடைந்த ஆன்மாக்களுக்கு
பரிந்து பேச மாட்டாரோ?

பிறக் கின்ற உயிர்களுக்காய்
மனம் மகிழும் அன்னையவர்
மரிக் கின்ற உயிர்களுக்காய்
மனம் இரங்க மாட்டாரோ?

சின்ன சின்ன காரியமும்
சிறக்க வைக்கும் அன்னையவர் - ஆன்மாக்கள்
சின்னா பின்னம் ஆகிவிட
சிறு துளியும் விடுவாரோ?

சாத்தானின் சூழ்ச்சி வலை
பிய்த் தெறியும் அன்னையவர்
சாத்தானின் ஆட்சி பிடி – நம்மை
சிக்கி விடச் செய்வாரோ?

தரித் திரப் பிறவிக்கே
கரிசனம் காட்டும் அன்னையவர்
உயிர்த் தெழும் வாழ்விற்கு
உந்தி விட மாட்டாரோ?

தத் தளிக்கும் சனங்களுக்கு
தயவு தரும் அன்னையவர்
உத் தரிக்கும் ஆன்மாக்களுக்கு
உபயம் தர மாட்டாரோ?





மற்றும் சகோதரத்துவம் மலர்ந்திட அருள்புரிய இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் இறைவா எங்களது குடும்பத் தலைவர்கள், தலைவிகள், பிள்ளைகள் அனைவரும் தம் பொறுப்புகளை உணர்ந்து பொறுப்புள்ள பெற்றோர்களாக, பொறுப்புள்ள பிள்ளைகளாக, பொறுப்புள்ள கணவனாக, மனைவியாக வாழ்ந்திட தேவையான உமது அருளை பொழிந்திட இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## திருவருகைக் காலத்தின் முதல் ஞாயிறு(03.12.2023)
### (எசா 63:16-17,64:1,3-8; 1கொரி 1:3-9; மாற் 13:33-37)

### திருப்பலி முன்னுரை

இறை இயேசுவில் அன்பான சகோதர சகோதரிகளே, திருவருகைக் காலத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை நாம் வாசிக்கின்ற இறைவார்த்தையானது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுடைய இரண்டாம் வருகையைப் பற்றி எடுத்துச் சொல்லி நம் அனைவரையும் விழிப்பாயிருந்து தயாரிக்க அழைப்பு விடுக்கின்றது. கிறிஸ்து மீண்டும் வருவார் என்பது நம் கத்தோலிக்கத் திருச்சபையின் மாபெரும் நம்பிக்கையாக இருக்கின்றது. இதைத்தான் ஒவ்வொரு திருப்பலியிலும் கிறிஸ்து மரித்தார், கிறிஸ்து உயிர்த்தார், கிறிஸ்து மீண்டும் வருவார்" என நம் நம்பிக்கையின் மறைபொருளாக அறிக்கையிடுகின்றோம். இயேசுவின் இரண்டாம் வருகை குறித்து விவிலியத்தில், குறிப்பாக புதிய ஏற்பாட்டில் 318 இடங்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. எனவே, இரண்டாம் வருகை குறித்து யாருக்கும் சந்தேகம் தேவையில்லை. விவிலியத்தின் அடிப்படையில் இயேசு நிச்சயமாக, உறுதியாக வருகிறார். ஆனால் எப்போது வருவார் என்று யாருக்கும் தெரியாது. யாரும் நினையாத நேரத்தில் ஒரு திருடனைப் போல வருவார். எனவே, நாம் எல்லா நேரத்திலும் விழிப்பாயிருக்க வேண்டும் என்று இன்றைய நற்செய்தியில் ஆண்டவர் அழைப்புவிடுக்கின்றார். விழிப்பாயிருப்பதன் வழியாக நாம் நம் ஆன்மாவைக் காத்துக்கொள்ள முடியும். எல்லாவிதமான பாவத்திலிருந்தும் நம் இதயத்தையும், ஆன்மாவையும் காத்துக்கொள்ள வேண்டுமானால் நாம் விழிப்பாயிருக்க வேண்டும். நீதிமொழிகள் 4:23-ல் விழிப்பாயிருந்து உன் இதயத்தை காவல் செய்" என்று சொல்லப்படுகிறது. விழிப்பாயிருப்பதனால் நம் கவலைகளிலிருந்தும் நாம் விடுபடுகின்றோம் சாலமோனின் ஞானம் 6:15-ல் விழிப்பாயிருப்போர் கவலையிலிருந்து விரைவில் விடுபடுவர் என்று சொல்லப்படுகின்றது. ஆகவே, ஆண்டவருடைய வருகைக்காக விழிப்பாயிருப்பவர்கள் இறைவனின் அமைதியைப் பெற்றுக்கொள்கின்றார்கள். எனவே, இறைவன் கொடுக்கின்ற அழைப்பை ஏற்றுக் கொண்டு இத்திருவருகைக் காலம் முழுவதும் விழிப்பாயிருந்து இறைவேண்டல் செய்து நம்மையே தயாரிப்போம்.

### முதல் வாசக முன்னுரை

நாம் அனைவரும் கடவுளின் கைவேலைப்பாடுகள். அவர் ஒருவரே நம் தந்தை. அவர் நேர்மையைக் கடைப்பிடிப்போருக்கும், இறைவழியில் வாழ்வோருக்கும் உதவி செய்ய விரைந்து வருவார் என்பதை இறைவாக்கினர் எசாயா எடுத்துச் சொல்கின்றார். கவனமுடன் செவிகொடுத்து இறை வழியில் வாழ முயற்சி செய்வோம்.

### இரண்டாம் வாசக முன்னுரை

இயேசு கிறிஸ்துவின் வருகைக்காக காத்திருப்போர் பேறுபெற்றோர். அவர்களுக்கு எதுவும் குறைபடாது. மாறாக, இறையருள் நிறைவாகப்

நாட்டை ஆள வேண்டும் என்ற நப்பாசையில் அதிக வெறிபிடித்து அலைகின்றனர். தனி மனிதர்களையும் இத்தகைய தலைக்கனம் விட்டுவைக்கவில்லை. இப்பின்னணியில் இன்று நாம் திருவழிபாட்டு ஆண்டின் சிகரமாகக் கிறிஸ்து அரசர் பெருவிழாவைக் கொண்டாடுகின்றோம்.

உலக வரலாற்றில் அரசர்கள் தங்களை தங்கள் அதிகாரங்களை நலன்களை முன்னிலைப்படுத்தி மக்களின் தேவைகளை புறக்கணித்த காலத்தில் கிறிஸ்துவை அரசராக அறிவித்து அரசர்களுக்கு ஒரு முன்மாதிரியாகவும் மக்களுக்காக மக்களுடன் வாழுகின்ற மக்களின் தலைவராகவும் இயேசுவை உலகிற்கு திருஅவை வழங்கிய நிலையில் இவ்விழா கொண்டாடப்படுகிறது.

இயேசு கிறிஸ்து உண்மையான அரசர். ஆனால் அவரது அரசு வித்தியாசமான அரசு. இன்றைய திருப்பலியின் தொடக்கவுரை அவருடைய அரசின் தனிப்பண்புகளைப் பின்வருமாறு பட்டியலிட்டுக் காட்டுகிறது. அத்தகைய உண்மையின் நீதியின் அன்பின் அமைதியின் அரசு இவ்வுலகில் மலர செபிப்போம் இத்திருப்பலியில்.

**முதல் வாசக முன்னுரை**

கிறிஸ்து நல்ல மேய்ப்பர் என்று இன்றைய முதல் வாசகம் கூறுகிறது. அவர் மந்தையை மேய்த்து இளைப்பாறச் செய்கிறார். காணாமற்போன ஆடுகளைத் தேடி செல்கிறார். காயத்திற்கு கட்டுப் போடுகிறார். நலிந்தவற்றைத் திடப்படுத்துகிறார். ஆடுகள் வாழ்வு பெறவும் அதை நிறைவாகப் பெறவும் அவர் தமது உயிரையே கொடுக்கிறார். இத்தகைய தனிப்பண்புகள் நம் அரசியல், சமூக, சமய, குடும்ப தலைவர்களிடமும் செழித்து ஓங்கிட அருள் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

கிறிஸ்து அரசர் திருநாளாகிய இன்று கிறிஸ்து சாவின் மேல் கொண்ட வெற்றியின் மூலம் தாம் மட்டும் அரசராகாது தம்மில் விசுவாசம் கொள்வோரும் அவரோடு அரசுரிமை பெற வழிவகுக்கிறார் என்று இவ்வாசகம் கூறுகிறது. கிறிஸ்து முதற்கனி, நாம் அனைவரும் அவரை தொடர்ந்து அவரது அரசுடமையில் பங்கு பெறுவோம் என்ற நம்பிக்கையோடு இவ்வாசகத்திற்கு திறந்த மனதுடன் செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் கிறிஸ்துவைப் போல் நல்ல மேய்ப்பர்களாக வாழ்ந்து தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களின் ஆன்மீக சமூக நலன்களில் அக்கறை கொண்டு வாழ தேவையான அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
2. அன்பின் இறைவா எம் அரசியல், சமூக மற்றும் சமய தலைவர்கள் கிறிஸ்துவின் தலைமைப் பண்பை தமதாக்கி மக்களின் நலன்களில் அக்கறை கொண்டு அவர்களது நலனுக்காக தங்களை அர்ப்பணித்து வாழக் கூடிய இறையருளைப் பொழிந்திட இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3. அன்பின் இறைவா எம் நாடுகளுக்கிடையே இருக்கின்ற பகைமையும் வெறுப்பும் மறைந்து ஒற்றுமை, சமாதானம், அமைதி





# ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்



அருள்பணி. ஆனந்த் லூர்துராஜ் ம.ஊ.ச,
அமலோற்பவ மாதா ஆலயம், பூம்பொழில்நகர்.

**பொதுக்காலம் 32 -ம் ஞாயிறு (12.11.2023)**

சஞா 6: 12-16 1தெச 4:13-18 மத் 25:1-14

**முன்னுரை**

இறையேசுவில் அன்பிற்குரிய இறைமக்களே இன்று எத்தனையோ பிரிவினை சபைகள் உலகம் விரைவில் முடியப் போகிறது என்று கூறி மக்களை அச்சுறுத்தி வருகின்றனர். இன்றைய நற்செய்தியில் கிறிஸ்து நமக்குக் கூறுகிறார்: விழிப்பாயிருங்கள் ஏனெனில் மனுமகன் வரும் நாளோ வேளையோ யாருக்கும் தெரியாது என்று.

உலக முடிவைப் பற்றியும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப் பற்றியும் அறிய முற்படுவது கடவுளுக்கு எதிரான செயலாகும் என்கிறார் கிறிஸ்து. உலகம் எப்போது முடியும் அல்லது மணமகன் எப்போது வருவார் என்று தெரியாத நிலையில் நள்ளிரவில் விழிப்புடன் விளக்குகளுடன் காத்திருந்த முன்மதியுள்ள ஐந்து கன்னியர்களைப்போல, நாமும் எப்போதும் விழிப்பாக இருந்திட இன்றைய இறைவார்த்தை வழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கின்றது. விழிப்புடன் காத்திருக்க நமக்கு ஞானமும் முன்மதியும் அவசியம் என்கின்றது இன்றைய நற்செய்தி. முன்மதியோடு செயல்பட்டு மணமகனின் திருமண விருந்தில் பங்கு பெற்ற ஐந்து கன்னியர்களைப் போல நாமும் தகுந்த தயாரிப்புடன் வாழ்ந்து கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் அவரோடு இணைந்து விண்ணக விருந்தில் பங்குபெற தேவையான ஞானத்தையும், முன்மதியையும் வேண்டி இத்திருப்பலியில் பங்குபொறுவோம்.

**முதல் வாசக முன்னுரை**

இன்றைய முதல் வாசகம் முன்மதியை ஞானம் எனக் குறிப்பிடுகின்றது. ஞானம் ஒளி மங்காதது, தன்னைத் தேடுவோர்க்கு வெளிப்படுத்தும் தனக்குத் தகுதியுள்ளவர்களைத் தேடி செல்லும் என ஞானத்தின் மேன்மையைப் பற்றிக் கூறுகிறது. ஞானமுள்ளோர் எப்போதும் விழிப்பாயிருப்பர் என்கின்றது இம்முதல் வாசகம். ஞானத்தோடும், முன்மதியோடும் செயல்பட இறையருள் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

ஆண்டவரது இரண்டாம் வருகையை விரைவில் எதிர்பாத்திருந்த தெசலோனிக்கர் கிறிஸ்துவின் உயிர்ப்பிலும் பங்குபெறுவர் என்ற நம்பிக்கையான வார்த்தையை பவுல் தருகிறார். இவ்வுலகில் கிறிஸ்துவின்

போதனைகளுக்கும் மதிப்பீடுகளுக்கும் ஏற்ற முறையிலே வாழ்க்கை நடத்தி அவரது இரண்டாம் வருகையின்போது அவரது இறையாட்சிக்குரிய மக்களாக வாழ இறைவார்த்தை நமக்கு அழைப்பு விடுக்கின்றது. உயிர்த்த ஆண்டவர் என்றும் வாழ்வதுபோல் நாமும் அவரோடு முடிவற்ற வாழ்விலே பங்கு பெறுவோம்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் கிறிஸ்துவின் மதிப்பீடுகளை வாழ்வாக்கி அக்கிறிஸ்துவின் இறையாட்சியை இவ்வுலகில் கட்டி எழுப்பிட தேவையான அருள்புரிய இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
2. அன்பின் இறைவா எங்களது அனுதின வாழ்வில் நடக்கின்ற நிகழ்வுகளையும், உமது திட்டத்தையும் புரிந்து கொண்டு செயல்பட தேவையான ஞானத்தையும், முன்மதியையும் கொடைகளாக வழங்கிட அருள்வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3. அன்பின் இறைவா உமது இரண்டாம் வருகைக்காக காத்திருக்கின்ற நாங்கள் ஒவ்வொருவரும் நற்செய்தியில் வருகின்ற முன்மதியை கொண்ட அக்கன்னியர்களைப்போல தகுந்த தயாரிப்போடு அவரது வருகைக்காக காத்திருக்கத் தேவையான அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
4. அன்பின் இறைவா கிறிஸ்துவின் விசுவாசம் கொண்டு இறந்த உமது அடியார்களை உமது உயிர்ப்பிலும் உமது நிலை வாழ்விலும் பங்கு பெற அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## பொதுக்காலம் 33 -ம் ஞாயிறு(19.11.2023)

நீமொ 31:10-13,18-20,30-31 1தெச 5:1-6 மத் 25:14-30

**முன்னுரை**

சோம்பேறியாக இருப்பவர்களுக்கும், வீணாக பொழுதைக் கழித்துக் கொண்டு இருப்பவர்களுக்கும் வித்தியாசம் உண்டு. எதையாவது சாதித்துவிட வேண்டும், மற்றவர்களிடம் பாராட்டுப் பெற வேண்டும் என்றெல்லாம் சோம்பேறிகளிடம் இலக்கு இருக்கும். ஆனால் அதை நிறைவேற்றிக் கொள்வதற்கான ஆர்வமும், உற்சாகமும் விடாமுயற்சியும் இருக்காது. ஆனால் நமது அனுதின வாழ்வில் வீணாகும் பொழுதை கழிக்கவோ, சோம்பேறியாக இருக்கவோ இறைவன் நம்மை படைக்கவில்லை மாறாக இறைவனால் நமக்களிக்கப்பட்ட கொடைகளை, நலன்களை திட்டமிட்டு தெளிவான இலக்கை நோக்கி செல்லவும் அதன் வழியாக பெறுகின்ற வெகுமதியை கொண்டு மகிழ்ந்து வாழவும் இறைவன் நம்மை அழைக்கின்றார். இறைவன் நம்மிடமிருந்து எதிர்பார்ப்பது அவர் கொடுத்த சக்திகளை, திறமைகளை நாம் முழுமையாக பயன்படுத்தி வாழ்வில் உயர்வு பெற வேண்டும் என்பதே. இத்தகைய உண்மையை நமக்கு உணர்த்துவதாக இன்றைய இறைவார்த்தை அமைகிறது. எப்பொழுதுமே திறமை மட்டும் இருந்தால் உயர்வு கிடைப்பதில்லை. மாறாக திறமைகளோடு இணைந்த உழைப்புதான் வாழ்வில் உயர்விற்கு வழிகோலுகிறது என்ற





உண்மையை உணர்ந்து வாழக் கூடிய இறைஞானத்தையும் இறைஅறிவையும் வேண்டுவோம் இத்திருப்பலியில்.

**முதல் வாசக முன்னுரை**

ஒழுக்கம் மற்றும் சமயம் சார்ந்த போதனைகளின் தொகுப்புதான் நீதி மொழிகள் ஆகமம். சோம்பித்திரிவதே பல பாவங்களுக்கு காரணமாக அமைகிறது. புறணி பேசுதல், வீண் வம்பு, பகைமை வளர்த்தல், நாவடக்கம் இல்லாத்தன்மை இன்னும் பல பாவங்களுக்கும் தோற்றம் சோம்பலே என்பதை உணர்ந்து சோம்பல் அகற்றி சுறுசுறுப்புடன் பற்பல வேலைகளில் ஈடுபட்டு சிறப்பாக திருமறைப்பணி, குடும்பப் பணி மற்றும் பிறரன்புப் பணி செய்திட இறையருள் வேண்டுவோம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

ஆண்டவர் மறுபடியும் வருவார் என்பது நமது நம்பிக்கை. எப்போது வருவார் என்பது பற்றித் திட்டவட்டமாகத் தெரியாவிட்டாலும், உண்மையாக வருவார் என்பது திருஅவையின் நம்பிக்கை. இறைவனது வருகைவரை நாம் விழித்திருக்க பவுல் அடிகளார் நமக்கு அழைப்பு விடுக்கின்றார். எனவே சோம்பேறித்தனத்தை அறவே ஒழித்துவிட்டு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்காக தகுந்த தயாரிப்போடு இருப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் இறைவன் கொடுத்த கொடைகளை கொண்டு இறையரசை இவ்வுலகில் கட்டி எழுப்பிட போதுமான இறையருளைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
2. அன்பின் இறைவா எங்களது சோம்பேறித்தனமே எங்களது பாவங்களுக்கு காரணமாக இருப்பதை உணர்ந்து சோம்பேறித்தனத்தை விடுத்து சுறுசுறுப்போடு செயல்படவும் புத்துணர்வு கொண்டவர்களாக மகிழ்ச்சியோடும் தன்னம்பிக்கையோடும் வாழ்ந்திட அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3. அன்பின் இறைவா உழைப்பாளிகள் தங்கள் உழைப்பிற்கு ஏற்ற ஊதியம் பெற்றிடவும் முதலாளிகள் தொழிலாளிகள்மீது அக்கறையோடும், கரிசனையோடும் செயல்படவும் வரம் தர வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
4. அன்பின் இறைவா உழைக்காதவன் உண்ணலாகாது என்ற இறைவர்த்தையை உணர்ந்து உழைப்பின் மேன்மையை உணர்ந்து வாழவும் எங்களது கடின உழைப்பின் வழியாக எங்களது வாழ்வின் பொருளாதார மற்றும் சமூக தரத்தை உயர்த்திக் கொள்ள வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## கிறிஸ்து அரசர் பெருவிழா(26.11.2023)

எசே 34:11-12,16-17 1கொரி 15:20-28 மத் 25:31-41

**முன்னுரை**

இறையேசுவில் அன்புக்குரிய இறைமக்களே இன்று ஒவ்வொரு நாடும் வல்லரசாக மாற வேண்டும் என்ற மமதை பிடித்துச் செயல்படுகிறது. அவ்வாறே அரசியல் கட்சிகளும் அரசியல்வாதிகளும்